# அன்பு மக்களே!


தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு மார்கழி 2025 ஒளி 38 கதிர் 310

TAMIL CATHOLIC MONTHLY PUBLICATION DECEMBER 2025 YEAR 38 VOL 310


## அகில உலக நீதிக்கும் சமாதானத்திற்குமான தேடல் சஞ்சிகை

## Magazine For, "Search Of Peace And Justice Around The World"

2025 - 2026
Christmas & New Year







உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக
உலகில் அவருக்கு உகந்தவர்களுக்கு அமைதி
உண்டாகுக (லூக்காஸ் 2:14)

2026
"ஆயுதங்களற்ற அமைதியை நோக்கி"







கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் (CTC NETWORK)

## ஸ்தாபிதம்
## ஆனி 1995


**முகவரி**
41 EARL STREET, TORONTO. ON.M4Y 1M4
CANADA.
Email : tamilcatholicpublication@gmail.com
Website : https://ctcnw.org/
தொலை பேசி : ௗ1(647) 852-3141



**தயாரிப்பு வெளியீடு**
கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

**ஆசிரியர் குழு**
திரு தோமஸ் டேவிட் சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**ஆலோசனை குழு**
அருட் தந்தை வார்கீஸ் செல்வராஜா
அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமஸ்
அருட் தந்தை யூபின் லோரன்ஸ்

**தெழில் நுட்ப உதவி**
திரு மரியதாஸ்
சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை
திருமதி பிறின்ஸ் தீபா

**விநியோகஸ்தர்கள்**
கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்
தன்னார்வத் தொண்டர்கள்

**கிடைக்கும் இடங்கள்**
**ரொறொன்ரோ**
புனித அந்தோனியார் தேவயலயம்
புனித லூர்து மாதா தேவாலயம்
புனித ரோசா லீமா தேவாலயம்
புனித பர்னபாஸ் தேவாலயம்
புனித எயார் வேய்ஸ் தேவாலயம்

**மாக்கம்**
தோமாஸ்மோர் தேவாலயம்
போனிபஸ் தேவாலயம்

**டொன்மிலஸ்**
புனித 23ம் அருளப்பர் தேவாலயம்
தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக்குழு
தமிழ் மொழ் கற்கும் வகுப்புக்கள்
மெகா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்

**ஆதரவு**
கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்


## நத்தார் புதுவருட ஆராதனை திருப்பலி நேர அட்டவனை

### 1. மிசிஷாகா வான் வழி மாதா ஆலயம் (Our Lady Of Airways)

புனித பத்திமா அன்னை தமிழ் ஆன்மீக பணியக நெறிப்படுத்தலில்

| | | |
|---|---|---|
| நத்தார் திருப்பலி | 24.12.2025 | இரவு 11.00 |
| புதுவருட நற்கருணை ஆராதனை | 31.12.2025 | இரவு 10.00 |
| புதுவருட திருப்பலி | 31.12.2025 | இரவு 11.00 |

### 2. புனித பிலிப்புநேரியார் ஆலயம்

புனித பத்திமா அன்னை தமிழ் ஆன்மீக பணியக நெறிப்படுத்தலில்

| | | |
|---|---|---|
| நத்தார் திருப்பலி | 24.12.2025 | இரவு 11.00 |
| புதுவருட நற்கருணை ஆராதனை | 31.12.2025 | இரவு 10.00 |
| புதுவருட திருப்பலி | 31.12.2025 | இரவு 11.00 |

### 3. மத்திய ரொறொன்ரோ புனித லூர்து மாதா தமிழ் பங்கு

| | | |
|---|---|---|
| தமிழ் கரோல் பாடல் | 24.12.2025 | இரவு 8.30 |
| நத்தார் தமிழ் திருப்பலி | 24.12.2025 | இரவு 9.00 |

| | | |
|---|---|---|
| நற்கருணை ஆர-ாதனை | 31.12.2025 | இரவு 11.00 |
| புதுவருட தமிழ் திருப்பலி | 01.01.2026 | காலை 12.01 |

### 4. ஸ்காபுரோ புனித ஆரோக்கிய மாதா தமிழ் பங்கு

| | | |
|---|---|---|
| நத்தார் திருப்பலி | 24.12.2025 | இரவு 7.00 |
| நத்தார் தமிழ் திருப்பலி | 24.12.2025 | இரவு 11.30 |
| நத்தார் தமிழ் திருப்பலி | 25.12.2025 | மதியம் 11.00 |

| | | |
|---|---|---|
| புதுவருட திருப்பலி | 31.12.2025 | இரவு 11.00 |
| புதுவருட தமிழ் திருப்பலி | 31.12.2025 | இரவு 11.30 |
| புதுவருட தமிழ் திருப்பலி | 01.01.2026 | மதியம் 12.30 |

## அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய அன்பு மக்களே! எமது மாதாந்த சஞ்சிகையினுடைய வாசகர்களே!



இவ் “அன்பு மக்களே” சஞ்சிகை 310வது சஞ்சிகையாக நமது சமுதாயத்திற்கு வருகை தருகின்றதையிட்டு பெருமகிழ்வு கொள்கின்றோம். இந்த சஞ்சிகையினுடைய இயல்பிலே இந்த வருடம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட நமது கத்தோலிக்க திருச்சபையின் யூபிலி ஆண்டின் ஒவ்வொரு பகுதியினருக்குமாக நிகழ்ந்த எதிர்நோக்கின் நிகழ்வுகளின் தரவுகள் மற்றும் அது சார்ந்த அனைத்து ஆன்மீக விடயங்கள் தாங்கிய அன்பு மக்களே சஞ்சிகையின் வெளியீட்டின் பின்னர் வருகின்ற சஞ்சிகையாக இது அமைந்திருக்கின்றது. இந்த சஞ்சிகை இறை இயேசுவின் பிறப்பை நாம் அர்த்தமுள்ள விதத்தில் நினைவு கூறுகின்றோமா என்பதை சீர்தூக்கி பார்க்க உதவும் ஒரு கைநூல் ஏடாக அமைந்திருக்கின்றது என்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றோம்.

இயேசுவினுடைய பிறப்பு “உலகில் அவருக்குகந்தோருக்கு அமைதி உண்டாகச் செய்யும்” (லூாக் 2:14), என்னும் சம்மனசானவர்களுடைய அருள் வாக்கு நிறைவேறும் என்னும் கூற்றோடு 2026 ஆம் ஆண்டு நமக்கு புதிதாக பிறக்கின்றது. ஆகவே இந்த மலர் வெளியிடப்படும் பொழுது இந்த மலரில் வருகின்ற அர்த்தமுள்ள கட்டுரைகள், கவிதைகள், தகவல்களை தருகின்ற ஆக்கங்கள் நம் ஒவ்வொருவருடைய இதயங்களிலும் ஞான அறிவையும் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், இதனுடைய இயல்பின் தன்மைகளில் நமது வாழ்வின் இயல்புகள் இணைந்து தொடர்ந்து செல்ல துணை புரிகின்றது.

பிறக்கின்ற இப்புதிய ஆண்டின் தொடக்கத்திலேயே இந்த சஞ்சிகை எங்கள் கைகளில் தவழ்ந்து, 2026 வருடம் முழுவதும் வாசிக்கப்படப் போகின்ற இறை வார்த்தைகளின் விழிப்புணர்வாக இருக்கும் படியும், அவரவர் வாழ்கையிலே அவர்கள் தகுதியுடைவர்களாக இருக்க வேண்டும் என்னும் கத்தோலிக்க திருச்சபையினுடைய கருத்து வெளிப்பாடுகள் முழுமையாக நமக்கு தருகின்றதை நாம் பார்க்கின்றோம். முதலாம் ஆண்டின் முதல் ஞாயிற்றுக் கிழமையின் முதல் வாசகத்திலே நமக்கு தரப்பட்டிருக்கின்ற இந்த கூற்றுகளோடு நாம் இந்த ஆண்டினுடைய இயல்புகள் இறை இயேசுவினுடைய இயல்பினை முழுவதுமாக சிந்திக்க தோன்றுகின்ற எத்தனையோ கருத்துக்களை, விழுமியங்களை நாம் விழிப்போடு உற்று நோக்குவதற்கு நமக்கு தரப்பட்டிருக்கின்ற தரவுகள் இதில் ஏராளம். இறை இயேசுவினுடைய இயல்பினை நாம் சிந்திப்பதோடு மட்டுமல்லாமல் எழுத்து வடிவம் கொடுக்க ஆரம்பித்தால் இந்த பூமிப் பந்தே கொள்ள முடியாது. ஆகவே இப்பொழுது நாம் தருகின்ற இந்த தரவுகள் எம்மால் முடிந்தளவு எம்மோடு சேர்ந்தவர்களுடைய நல் எண்ணங்களோடு இணைந்து, இவற்றை வெளியிடுவதற்கு தரப்பட்டிருக்கின்ற தரவுகள் கட்டுரைகள் நம்முடைய வாழ்நாளிலே வரப்போகின்ற ஆண்டின் முழுமையான இயல்புகளை நாம் வாசிப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்திருக்கின்றது.

ஆகவே அன்பிற்குரியவர்களே! ‘‘அன்பு மக்களே’’ சஞ்சிகை அள்ளித்தருகின்ற ஆன்மீக விருந்தை நீங்கள் நிறைவாக சுவைத்து, சுகமாக மனதிலே ஏற்று, உங்களுடைய மனதுகளிலே நீங்கள் சமாதானம் அடைய அருள் புரிகின்ற ஒரு அற்புதத்தை பெறுவீர்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த நத்தார் திருவிழாவினுடைய இந்த சஞ்சிகையை நாம் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

இறை இயேசுவினுடைய பிறப்பு ஏழை மக்களுக்கும்,சமாதானம் விரும்புவோர்களுக்கும், அத்தோடு ஞானம் நிறைந்த விசுவாச வாழ்வில் இறை இயேசுவின் இயல்பை கொண்டு இயங்குபவர்களுக்கும் மிகத் துணையான அடையாளமாக திகழ்கின்றது : ‘‘சமாதனம் செய்வோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுவர்” என்ற வார்த்தை நிறைவாக உங்கள் மத்தியிலே நிறைந்திருக்க இறை இயேசுவை வேண்டி, உங்களுக்கு நத்தார் புது வருட வாழ்த்து கூறி, மேலும் புதிய ஆண்டிற்குள் உங்களை வரவேற்று, இவ் ஆண்டின் புது வாழ்வை ருசிக்கும் உண்மையான நன்மையை நீங்கள் பெற ஆசீர்வதித்து நிற்கின்றோம். நன்றி.

**அன்புடன் உங்கள் தோமஸ் டேவிட்**
**(CTC NetWork தலைமை ஆசிரியர்)**

**ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் ஞானத்தையும் நற்பயிற்சியையும் மூடரே அவமதிப்பர். (நீதி. 1:7)**




## திருவருகை “தளிர் வளையம்” “ADVENT WREATH”

எம் தாய் திருச்சபை தனது “வரலாற்றிலும் வழிபாட்டிலும் பல அடையாளங்களை கொண்டுள்ளது. குடில், நட்சத்திரம், கிறிஸ்மஸ் மரம், கிறிஸ்மஸ் தாத்தா, போன்றவைகளின் வரிசையில் 5 மெழுகு வர்த்திகளை உள்ளடக்கிய திருவருகைக்கால தளிர் வளையமும் ஒன்று.

ஆங்கிலத்தில் இதை (Advent Wreath) என்பர். நம்மில் பலர் அறிந்ததும் அறியாததுமாகிய தளிர் வளையத்தின் அடையாள முக்கியத்துவத்தினையும், அதனைத் தொடர்ந்து இந்த திருவருகைக் காலத்தில் சில வழிபாட்டு மரபுகளையும் இந்த கட்டுரையில் பார்ப்போம்.

கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடுவதற்காக அதற்கு முன்பாகவே நான்கு வாரங்களாக நாம் நம்மையே தயாரிக்கின்றோம். இந்த தயாரிப்புகான வாரங்களே திருவருகைக்காலம் எனப்படும். இவ்வாறு ஒவ்வொரு வாரத்தினையும் சந்திக்கும் போதும், அந்த வாரம் எதைக் குறிக்கின்றது என்பதை குறித்து காட்டுவதை வெவ்வேறு நிறத்தாலான மெழுகுவர்த்திகளை ஏற்றி அர்த்தப்படுத்துவதே திருவருகைக்கால தளிர் வளையத்தின் முக்கியத்துவம் ஆகும். அடையாளங்கள் இல்லாமல் திருவழிபாடு இல்லை என்பதை நாம் நன்கு அறிவோம். அவ்வாறே திருவருகைக்கால முழுவதையுமே ஒரு வளையத்தில் அடையாளப்படுத்தி, திருவருகைக்கால ஒவ்வொரு வாரத்தினையும் ஒரு மெழுவர்த்தியால் அர்த்தப்படுத்தி, கிறிஸ்து பிறப்பு வருகிறது, இதோ வருகிறது, வந்துவிட்டது என்று ஒளியால் வழிகாட்டும் இந்த திருவருகை தளிர் வளையம் நிச்சயமாக நமக்கு கிடைத்த ஒரு வரலாற்று பரிசே ஆகும்.

தளிர் வளையம் என்பது ஒரு முடிவிலி. இங்கு பசுமை மாறா வளைய வடிவம் என்பது ஆரம்பமும் முடிவும் அற்ற நம் ஆண்டவரையும் (He is the Alpha and the Omega), அவரது பசுமையான அன்பையும் (His Evergreen Love), குறித்து காட்டுகின்றது. இங்கு இவைகள் கிரீடம் (Crown), போல காட்ச்சியளிப்பதால் கிரீடம் கிறிஸ்து அரசரையும், அவரது இறை அரசையும் குறித்து நிற்கின்றது. கிறிஸ்துவின் இறையரசு தீமையின் அரசை வெற்றி கொண்டதன் அடையாளமாக உள்ளது. இந்த வெற்றியினை குறிப்பதற்காகவே “Larel” என்று அழைக்கப்படும் பசுமையான வாகை இலைகளும் இதில் பயன்படுத்தப்பபட்டன. ஆசியா நாடுகளில் இதன் பசுமையை குறிக்க “Evergreen Leaves” இலைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

முதல் வாரம் தொடங்கி ஒவ்வொரு வாரமும் ஏற்றப்படும் மெழுகுதிரிகள் உலகில் கிறிஸ்து என்னும் ஒளியின் வருகையை சுட்டிக்காட்டுகின்றது.

திருவருகைக் காலத்தில் நான்கு ஞாயிறுக்கிழமைகள் உள்ளன. முதல்வாரத்தில் ஏற்றப்படும் ஊதா நிற மெழுகுதிரி (Purple Candle), எதிர் நோக்கின் மெழுகுதிரி (Hope Candle) என்று அழைக்கப்படுகின்றது. இரண்டாம் வாரத்தில் ஏற்றப்படும் ஊதா நிற மெழுகுதிரி (Purple Candle), அமைதியின் மெழுகுதிரி (Peace Candle), என்று அழைக்கப்படுகின்றது. மூன்றாம் வாரத்தில் ஏற்றப்படும் ரோஸ் நிற மெழுகுதிரி (Pink Candle), மகிழ்ச்சியின் மெழுகுதிரி (Joy Candle), என்று அழைக்கப்படுகின்றது. இந்த மூன்றாம் வார ஞாயிறை (Gaudete Sunday - கவுதாத்தே ஞாயிறு) என்று அழைப்போம். இதன் அர்த்தம் மகிழ்வோம் ஞாயிறு. நான்காம் வாரத்தில்

**பிள்ளாய்! உன் தந்தை தந்த நற்பயிற்சியைக் கடைப்பிடி உன் தாய் கற்பிப்பதைத் தள்ளி விடாதே. (நீதி.1:8)**

ஏற்றப்படும் ஊதா நிற மெழுகுதிரி (Purple Candle), அன்பின் மெழுகுதிரி (Love Candle), என்று அழைக்கப்படுகின்றது. இந்த நான்கு மெழுகுவர்த்திகளின் நடுவில் வெள்ளை நிற மெழுகுவர்த்தி (White Candle), வைக்கப்பட்டுள்ளது. இதனை கிறிஸ்து மெழுகுதிரி (Christ Candle), என்று அழைக்கப்படும். இந்த மெழுகுவர்த்தி கிறிஸ்து பிறப்பு விழா அன்று ஏற்றப்படுகின்றது.

- *முதலாவது ஊதா நிற எதிர்நோக்கின் மெழுகுதிரி மெசியா மெழுகுதிரி அல்லது இறைவாக்கினர் மெழுகுதிரி என்றும் அழைக்கப்படுகின்றது. மெசியாவின் வருகையைக் குறித்து இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர்களை இது சுட்டிக் காட்டுகின்றது.*
- *இரண்டாவது ஊதா நிற மெழுகுதிரி பெத்தலகேம் மெழுகுதிரி என்று அழைக்கப்படுகின்றது. இது பெத்தலேகமை நோக்கிய யோசேப்பு மரியாளின் பயணத்தை சுட்டிக்காட்டுகின்றது.*
- *மூன்றாவது றோஸ் நிற மெழுகுதிரி இடையர்களின் மெழுகுதிரி என்றும் அழைக்கப்படுதின்றது. கிறிஸ்துவின் பிறப்பில் சாதாரண மக்களாகிய இடையர்களுக்கு வானதூதர்களால் வழங்கப்பட்ட மகிழ்ச்சியின் செய்தியை இது சுட்டிக்காட்டுகின்றது.*
- *நான்காவது ஊதா நிற மெழுகுதிரி வானதூதர்களின் மெழுகுதிரி என்று அழைக்கப்படுகின்றது. பெருமகிழ்சிசியின் செய்தியை அறிவித்த வானதூதர்களை இது குறித்து நிற்கின்றது.*

எனவே இந்த நான்கு மெழுகுதிரிகளும் கிறிஸ்து பிறப்பு மிக அண்மையில் உள்ளது என்று அறிவிக்கின்றன. திருவருகைக்காலம், தயாரிப்பு எதிர்நோக்கு என்னும் இரண்டு செயற்பாடுகளை நம் முன் வைக்கின்றது. கிறிஸ்துவின் இருவகை வருகைக்காக திரு அவை சமூகத்தோடு நம்மை ஆயத்தம் செய்கின்றது. ஒன்று கிறிஸ்துவின் குழந்தை பிறப்பு வருகை. இரண்டாவது கிறிஸ்துவின் நிறை வருகை. திருவருகை காலமே திருவழிபாண்டின் துவக்கமா உள்ளது. கிறிஸ்து அரசர் பெருவிழா திருவழிப்பாட்டாண்டின் நிறைவாக உள்ளது.

தவக்காலத்தினை போலவே திருவருகை காலமும் மனமாற்றத்திற்கான ஒரு காலமாக இருப்பதால் வழிபாட்டு நிறம் ஊதாவாக இருக்கின்றது. தவக்காலத்தில் நான்காவது வாரமான அகமகிழ்வு ஞாயிறில் றோசா நிறம் பயன்படுத்தப்படுவது போல், திருவருகைக் காலத்தில் மூன்றாவது ஞாயிறுக்கான மகிழ்வோம் ஞாயிறில் றோசா நிறம் பயன்படுத்தப்படுகின்றது. ஆண்டவருடைய பிறப்பு விழா அதனைத் தொடர்ந்து வருகின்ற திருப்பிறப்பு காலத்தில் வெந்நிற திரு உடைகள் பயன்படுத்தப்படுகின்றன. திருவருகைக் காலத்தில், அக்காலத்தின் தன்மைக்கேற்ப பீடத்தினை மிதமான மலர்களால் அணி செய்ய வேண்டும். அதிகமாக அணி செய்வது ஆண்டவரின் பிறப்பின் மகிழ்வை அன்றே காட்டுவதாய் அமைந்து விடலாம். கிறிஸ்து பிறப்பின் நாளுக்கு நான்கு வாரங்களுக்கு முன்பு வரும் ஞாயிற்றுக்கிழமையில் திருவருகைக்காலம் தொடங்குகின்றது. பொதுவாக கார்த்திகை 27 க்கும் மார்கழி 3ம் நாளுக்கும் இடையில் வருகின்ற ஞாயிறாக இது அமையும்.

திருவருகைக் காலத்தில் மார்கழி 17-24 வரை உள்ள வார நாட்கள் தயாரிப்பின் உச்ச நாட்கள் என கொள்ளலாம். இவை கட்டாய நினைவுகளை விட சிறப்பு பெறுகின்றன. இந்நாட்கள் கிறிஸ்து பிறப்பிற்கு நேரடி முன்னேற்பாடாக அமைந்துள்ளன. தவக்காலத்தினை போலவே திருவருகை கால நாட்களும் ஜெபத்திற்கும் நோன்பிற்கும் இடமளிக்க வேண்டிய நாட்களாகவே இருந்தன. ஆனால் 13ம் நூற்றாண்டுகளிலேயே பாரம்பரிய கிறிஸ்தவர்களே திருவருகைக் கால நோன்பை சரியாக கடைப்பிடிக்கவில்லை என்று வரலாற்றில் வாசிக்கின்றோம். பின் திருத்தந்தை 5ம் றூபன் திருவருகைக்கால நோன்பினை கடைப்பிடிக்க வேண்டும் என்று மக்களை கேட்டுக்கொண்டார். ஆனால் அது பரவலாக கடைப்பிடிக்கும் ஒன்றாக மாறவில்லை. காரணம், கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி இந்த நோன்பிற்கு இடம் கொடுக்கவில்லை என்றே கூறலாம்.

**மகிழ்ச்சி தரும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.**

**அருட் பணி குருதீபன் அ.ம.தி (தோமஸ் அந்தோனிப்பிள்ளை)**

**செல்வத்தை நாடுவதுபோல் ஞானத்தை நாடி, புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோடு அதைத் தேடு. (நீதி.2:4)**




## திருவருகைக் கால ஆன்மீகம்

திருவருகைக்காலத்தை ஆங்கிலத்தில் "ADVENT" என்று அழைக்கின்றோம். இது ''ADVENTUS" என்ற இலத்தின் சொலில் இருந்தே பெறப்பட்டது. ''ADVENTUS" என்றால் ''வருகை'' என்று பொருள். இலத்தின் மொழியில் திருவருகைக்காலத்தை ''ADVENTUS DOMINUS" என்று அழைப்பர். அதாவது ''ஆண்டவரின் வருகை'', "கடவுளின் திருமகனுடைய வருகை''. ஆகவே தான் கிறிஸ்துவின் வருகையை திருவருகைக்காலம் என்று அழைக்கின்றோம். இதனை அருளின் காலம் என்றும் அழைக்கின்றோம். எனவே உன்னத கடவுளின் மகனை இத்திருவருகைக்காலத்தில் வரவேற்க நாம் எத்தகைய ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதை மானிடராகிய நாங்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும். இயேசுவின் வருகைக்காக நாம் நம்மையே ஆயத்தம் செய்ய வேண்டியது கிறிஸ்தவர் எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை என்றால் அது மிகையாகாது.

**இறைமகன் இயேசுவின் வருகைகளில் மூன்று வகைகள் இருக்கின்றன.**

1. **இயேசுவின் முதல் வருகை**
   வார்த்தையாக இருந்த கடவுள் மனித உருவாக மரியன்னையின் உதரம் தங்கி உலகத்திலே பிறந்து பணிவாழ்வு மேற்கொண்டு, உயிர்நீத்து, உயிர்த்து, விண்ணகம் சென்றது. இந்த வருகையைத்தான் நாம் அனைவரும் கிறிஸ்மஸ் விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றோம்.
2. **இயேசுவின் இரண்டாம் வருகை**
   இறைவன் இயேசுவின் மாட்சியின் வருகை. காலங்கள் எல்லாம் முடிந்த பின், எல்லாம் நிறைவேறிய பின், ஆண்டவர் நடுத்தீர்க்க வருகின்ற நாள் இதுவாகும். இவ் இரண்டாம் வருகையிலே இயேசு மாட்சியோடும், மகிமையோடும், வருவார். நன்மையையும், தீமையையும் பிரித்திடுவார். நல்லவர்களை இறையாட்சியில் சேர்த்திடுவார். இந்த இரண்டாம் வருகையை மகிமையின் வருகை, அல்லது அவரது இறுதி வருகை என்றும் அழைப்பர்.
3. **இயேசுவின் மூன்றாம் வருகை**

இறைமகன் இயேசுவின் அநுதின பிரசன்னம் ஆகும். தினந்தோறும் நம்மத்தியிலே வருகின்ற உன்னதமான அவருடைய பிரசன்ன வருகை. அதாவது குறிப்பாக தினந்தோறும் திவ்விய நற்கருணை வழியாக வருகின்ற வருகை ஆகும். இந்த மூன்று வருகைக்கான தயாரிப்புக் காலம் தான் திருவருகைக்காலம் ஆகும்.

திருவருகைக் காலத்தில் மட்டுமல்ல, எல்லாக் காலங்களிலுமே கிறிஸ்தவர்கள் நாம் எம்மையே ஆயத்தமாக, விழிப்பாக வைத்திருக்க வேண்டும் என்று இயேசுவே கூறியிருக்கிறார். ''விழிப்பாயிருங்கள், ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்நாளில் வருவார் என்று உங்களுக்கு தெரியாது'' (மத்.24:42)

ஆகவே இந்த திருவருகைக்காலமானது நாம் நமது உன்னத இறைவனை எம் வாழ்நாள் முழுவதும் வரவேற்க நாம் நம்மையே நம் வாழ்நாள் முழுவதும் ஆயத்தம் செய்ய வேண்டும் என்பதை நமக்கு ஞாபகப்படுத்தும் காலம் ஆகும். சரி இந்த திருவருகைக் காலத்தில் நாம் நம்மையே எவ்வாறு அல்லது எத்தயைக முறையில் ஆயத்தம் செய்ய வேண்டும் அல்லது எவ்வாறு ஆண்டவரின் வருகையை எதிர்கொள்ள வேண்டும் என்பதை மூன்று முக்கியமான வார்த்தைகளை கொண்டு விளக்கலாம்.

**எனவே, நீ நல்லாரின் நெறியில் நடப்பாயாக! நேர்மையாளரின் வழியைப் பின்பற்றுவாயாக! (நீதி.2:20)**

1. நிரப்புதல்,
2. கொடுத்தல்
3. இழத்தல்

**1. நிரப்புதல்:**

கானா ஊர் திருமணத்திலே காணப்பட்ட கற்சாடிகளை ஒற்றுமைப்படுத்தி இதனை விளங்கப்படுத்தலாம். ஆண்டவர் அங்கே இருந்த 6 கற்சாடிகளையும் பார்த்து இவைகளை நீரினால் நிரப்புங்கள் என்று கூறுகிறார். சீடர்களும் அவைகளை விளிம்பு வரை நிரப்பினார்கள். அதாவது முழுமையாக நிரப்புகிறார்கள். இன்று நமது உடல் உள்ளம் ஆன்மா இதுதான் இந்த கற்சாடிகள். இந்த கற்சாடிக்குள்ளே நாம் உலகசம்பந்தமான விடயங்களைப் போட்டு நிரப்பி வைத்திருக்கின்றோம். என்னுடைய சுய நலம், காழ்ப்புணர்ச்சி, வன்மம், அகங்காரம், என்னும் பல பாவ கட்டுக்களையும், செல்வத்தின் மேல், பணத்தின் மேல், படையின் மேல் ஆசைகள், இவ்வாறான உலக அழுக்குகளை போட்டு நிரப்பி வைத்துள்ளோம். ஆண்டவர் கூறுகின்றார் பாவ முடிச்சுகளால் நிறைத்து வைத்திருக்கின்ற உனது உடல் உள்ளம் ஆன்மா என்னும் கற்சாடியை வெறுமையாக்கி அதனுள் விசுவாசத்தை நிரப்புங்கள். எப்பொழுதும் விசுவாசத்தை நிரப்பி விசுவாசத்தை மையப்படுத்தி வாழும் பொழுது அங்கே அன்பு பிறக்கும், மன்னிப்பு வளரும், பகிர்வு ஓங்கும், இவ்வாறு நற்செய்தியின் அனைத்து புண்ணியங்களும் இதனுடைய பரிசுகளாக இருக்கின்ற மதிப்பீடுகளும் நமக்குள்ளே அதிகமாக வளர வளர ஆண்டவருக்கான தயாரிப்பு நிறைவாக இருக்கும். ஆகவே ஆண்டவரை ஏற்றுக்கொள்ள தகுதி பெறுவோம்.

**2. கொடுங்கள்:**

உங்களிடம் இருப்பதை பகிர்ந்து கொள்ளுங்கள். இந்த கொடுங்கள் என்ற புண்ணியத்தை மூன்று (“T”) ஐ வைத்து விளங்கப்படுத்தலாம். அதாவது : Treasure – பொக்கஷம். Talent –திறமை. Time – நேரம்

**பொக்கிஷம் (Treasure) :** இதனை இல்லாதவர்களோடு பகிருங்கள், **திறமை (Talent) :** இதனை மற்றவர்களின் உயர்வுக்காக பகிருங்கள். **நேரம் (Time) :** இதனை பிறர் நலன்களுக்காக, தனிமையில் வாழ்பவர்களுக்காக, நோயினால் வாடுபவர்களுக்காக, மனநோய் மற்றும் துன்பத்தில் வாழுவோருக்ககாக, உங்கள் பொன்னான நேரங்கள் மூலம் உடன் இருந்து உதவுங்கள்.

**3. இழப்பது:**

என்னிடமிருக்கும் களைகளை கொஞ்சம் கொஞ்சமாக இழப்பது அல்லது அகற்றுவது. என்னிடமுள்ள துர்க்குணங்கள், தீய எண்ணங்கள், தீய சுபாவங்கள், செயல்பாடுகள், மற்றும் ஆண்டவருக்கு எதிராக என்னுள் இருக்கும் தீமைகளை வெட்டி அகற்றும் பொழுது நான் ஆண்டவரில் தளிர் விடும் மரமாக மாறுவேன். இவ்வாறு இத் திருவருகைக் காலத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொண்டு, இத் திருவருகைக் காலம் நமக்குத் தரும் எதிர் நோக்கிற்கு ஏற்ப எம்மையே ஆயத்தம் செய்து தகுதியான முறையில் இறை மகனை நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் வரவேற்க தகுதி பெறுவோம்.

**தோமஸ் டேவிட்**

**அன்பும் வாய்மையும் உன்னிடம் குன்றாதிருப்பதாக! அவற்றைக் கழுத்தில் அணிகலனாய்ப் பூண்டுகொள். (நீதி.3:3)**



## கிறிஸ்து பிறப்பு பெருவிழா

(SOLOMNITY OF CHRISTMAS)

**கிறிஸ்துவின் பிறப்புவிழா வாழ்த்துக்கள் உங்கள் எல்லோருக்கும்.**

*"இதோ எல்லா மக்களுக்கும் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உலகிற்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊராகிய பெத்தலகேமில் பிறந்திருக்கிறார்" (லூக் 2:10-11).*

கிறிஸ்துவின் பிறப்பு ஏன் எல்லா மக்களுக்கும் மகிழ்சியூட்டும் நற்செய்தி. காரணம் கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு அவர் இம்மானுவேல் என்று பெயரிடுவார்(ஏசா 1:23). கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவை சாவையே ஏற்கும் அளவிற்கு கீழ்படிந்து தம்மையே தாழ்த்தி கொண்டார். "இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்று எல்லா நாவுமே அறிக்கையிடும்" (பிலி: 2:6-11)

ஏன் நம்முடைய கடவுள் நம்மைப் போல வாழ்வதற்கு மனித அவதாரம் எடுத்தார். "அவருக்கு இயேசு என்று பெயரிடுவாய்" (மத் 1:21). என்ற தூதரின் வேண்டுகோளுக்கிணங்க "யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டார் (மத் 11:25). இயேசு என்னும் தமிழ் வார்த்தை (Jesus) என்னும் ஆங்கில வார்த்தையில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டது. (Jesus) என்னும் ஆங்கிலச் சொல் (Jeshua) என்னும் எபிரேய மூலச் சொல்லிலிருந்து வந்தது. அதாவது (Jeshua) என்றால் (My Salvation of God) கடவுள் எனது இரட்சனியம், இரட்சகர். நம்முடைய கடவுள் நம்மைப் போல வாழ்வதற்கு மனித அவதாரம் எடுத்தமைக்கான காரணம் : அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிலிருந்து மீட்கவே (மத் 1:25).

அன்பு மக்களே! இந்த கிறிஸ்து பிறப்பு விழா ஏன் எமக்கு பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி! பரம் பொருளாம் இறைவன், நம்மை நமது பாவ அடிமைத் தனத்திலிருந்து இரட்சிக்க மனிதவதாரம் எடுத்து, எங்களோடு குடி கொண்டு வாழ ஆரம்பித்த மெய்சிலிர்க்கும் மாபெரும் நிகழ்வின் காரணமாகவே கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக அமைகின்றது. "பழைய ஏற்பாட்டில் பல முறை பல வகைகளில் முற்காலத்தில் இறை வாக்கினர் வழியாக நம் மூதாதையாரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாட்களில் தம்மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்" (எபி1:1-2).

ஆதியிலே கடவுள் ஆபிரகாமை சந்தித்து உரையாடினார். மோயீசனோடு உரையாடினார். இவ்வாறு இறை வாக்கினர்கள் பிதா பிதாக்களோடு உரையாடி தாம் தேர்ந்தெடுத்த இஸ்ராயேல் மக்களை வழி நடத்தி வந்தார். மேலும் உடன்படிக்கை பேழையிலே அவர் பிரசன்னமாகி அவர்களோடு கூடவே இருந்தார். ஆனால் இன்று கடவுள் நம்மோடு கூடவே நித்தியத்திற்கும் வாழ மனிதனாக பிறக்கின்றார். இதன் காரணமாகவே கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியாக அமைகின்றது. இதனால் புனித பவுல் கூறுவார் ஆகவே இயேசுவின் பெயருக்கு வீண்ணவர் மண்ணவர் கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர் என (பிலி 2:10).

அன்பு மக்களே! வார்த்தை மனுவானார் நம்மிடையே குடி கொண்டார் (யோ.1:14). இவ்வாறு வார்த்தை மனிதனாகி, எலும்பும், தசையும், நெகமும் ஆகி, மனிதனோடு மனிதனாகி, மனிதனோடு வாழ்ந்து, தனது அன்பை, உணர்வை மனிதனோடு பகிர்ந்து கொள்கின்றார். இதனால் தான் கிறிஸ்மஸ் பண்டிகை இனம் மத மொழிகளையும் தாண்டி சர்வதேச ரீதியாக

**பொல்லார் செல்லும் பாதையில் செல்லாதே தீயோர் நடக்கும் வழியில் நடவாதே. (நீதி.4:14)**

எல்லோராலும் கொண்டாடப்படுகின்றது. எனவே கிறிஸ்மஸ் நாள் என்பது தெய்வீகமும் மனிதமும் ஒன்றர கலந்து திளைக்கும் நாள், கடவுளும் மனிதனும் மிக அந்நியொன்னியமாக வாழ ஆரம்பித்த நாள் என்பதை உங்கள் இதயத்தில் எழுதிவையுங்கள்.

''குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று'' என்று சொல்வார்கள் இந்த கிறிஸ்மஸ் உலகமுழுவதுமுள்ள குழந்தைகளால் மிகவும் விரும்பப்படும் அல்லது நேசிக்கப்படும் ஒன்றாக அமைந்திருக்கின்றது. காரணம் இந்த கிறிஸ்மஸ் உலக முழுவதுமுள்ள குழந்தைகளை மிக ஆழமாக கவர்ந்திழுக்கிறது. எத்தனை பிற சமய பெற்றோர்கள் கூற கேட்டிருப்போம், ''எமது குழந்தைகள் கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடும் போது அவர்களில் நாம் காணும் மகிழ்ச்சி எதனோடும் ஒப்பிட முடியாத மகிழ்ச்சியாக இருப்பதால் தவிர்க்க முடியாமல் நாமும் எமது வீட்டில் கிறிஸ்துமஸ் மரம், பாலன் பிறப்பு குடில், அலங்காரங்கள் செய்கின்றோம். கேக் முதல் அனைத்து பலகாரங்களையும் செய்கின்றோம். புத்தாடை வாங்குகிறோம், பட்டாசு கொளுத்துகின்றோம். கிறிஸ்தவ ஆலயங்களுக்கு எமது குழந்தைகளை அழைத்து சென்று பிறந்திருக்கும் பாலன் இயேசுவையும் பிறப்பின் சிறப்புகளை வெளிக் கொணரும் அடையாளங்களையும் காண்பிக்கின்றோம்''என்று.

ஆகவே **''கிறிஸ்மஸ்''** என்றால் கடவுள் நம்மோடு வாழ்வது, கடவுள் தனது அன்பை எம்மோடு பகிர்ந்து கொள்வது, கடவுள் மன்னிப்பை எமக்கு வழங்குவது, கடவுள் எம்மை பாவ அடிமைத்தனத்திலிருந்து இரட்சிப்பது போன்ற ஆழமான அர்த்தங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு உலக அதிசயமாக இருப்பதால் தான், கிறிமஸ் விழா முழு உலகத்திற்குமே பெரும் மகிழ்ச்சியூட்டும் விழாவாக அமைகின்றது.

உலகம் முழுவதும் வன்முறைகளும் போர்களும் சூழ்ந்து விலைமதிக்கமுடியாத பல உயிர்களை காவுகொண்டு, இடிபாடுகளுக்குள்ளும் இடர்பாடுகளுக்குள்ளும் மனிதர்களை தள்ளி, மனித அவலங்களில் அரசியல் நடாத்தும் ஆட்ச்சயாளர்கள், அரசியல் அமைப்புக்கள் மனம்மாற வேண்டும்.

இயேசுபாலனை கொலைசெய்யும் நடவடிக்கையில், அன்று ஜெருசலேமில் கொத்துக்கொத்தாக பல மழலைச்செல்வங்களை வெட்டி மாய்த்தது போல, காசாவிலும், ரஷ்ய யுக்ரேயன் போரிலும் எத்தனை ஆயிரம் மழலைச்செல்வங்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்படுகின்றார்கள். அரசுகளின் வறட்டு கௌரவங்களினால் எத்தனை மனிதர்கள் வாழ்க்கைத்துணையின்றி அநாதைகளாக, ஆதரவற்றவர்க ளாக வீடுகள் இழந்து, கஷ்ப்பட்டு இரவு பகலாக உழைத்து சேர்த்த சொத்துக்களை இழந்து, சகதிகளிலும் சாக்கடைகளிலும் தமது நெடுநாள் கனவுகளை-யெல்லாம் தொலைத்து வாழ்கிறார்கள்.

ஒருவேளை உணவாவது கிடைத்துவிடாதா என்று கறைபடிந்த முகங்களேடு முண்டியடித்து பசியோடும் கண்களில் கண்ணீரோடும் காட்ச்சியளிக்கும் சின்னஞ்சிறுசுகளை காண எம் உள்ளங்கள் கனமாகிப்போகின்றன.

இவ் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவில் வன்முறைகளும் போர்களும் மனித அவலங்களும் முடிவுக்கு வர ஆட்ச்சியாளர்கள் மனம்மாறி வன்முறைகளை கைவிட்டு, சமாதானம், சமத்துவத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவே, எமது திருத்தந்தை லியோ XVI, 2026 உலக அமைதி தினத்திற்காக தேர்ந்தெடுத்த கருப்பொருள், "உங்கள் அனைவருக்கும் அமைதி நிலவட்டும் என்பதாகும். ''நிராயுதபாணியான மற்றும் நிராயுதபாணியாக்குதல் அமைதியை நோக்கி'' என்பது தான் தை மாதம் 1ம் திகதி, கடவுளின் தாயான மரியாளின் வழிபாட்டு விழாவுக்கான கருப்பொருளாகும். உலகளாவிய அமைதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட வருடாந்த கொண்டாட்டத்திற்கான கருப்பொருளாகவும் நிறுவியுள்ளார். ''வன்முறை மற்றும் போரின் தர்க்கத்தை நிராகரித்து, அன்பு மற்றும் நீதியை அடிப்படையாகக்கொண்ட ஒரு உண்மையான அமைதியைத் தழுவ மனுக்குலத்தை அழைக்கின்றார்.

மேலும் எமது தமிழர் தாயகத்தில் அண்மையில் நிகழ்ந்தேறிய இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர் உடைமைகளை இழந்தவர்களுக்காக வேண்டுவோம்.

கிறிஸ்மஸ் விழாவை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட நாம் முதலில் மனம்மாறி பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்வோம். இன, மத பேதங்கள் களைந்து மனித நேயம் கொண்டு, மனித அவதாரம் எடுக்கும் மாபெரும் பரம்பொருள் இறைவனை தகுதியான முறையில் வரவேற்று, அவர் கொண்டுவரும் இரட்சிப்பை தகுதியான முறையில் பெற்று வாழ்வாங்கு வாழ மனம் மாறுவோம், வாழ்வு பெறுவோம்.

**தோமஸ் டேவிட்**

**நேர்மையான பாதையில் நட் அப்பொழுது, உன் போக்கு இடரற்றதாயிருக்கும். (நீதி.4:26)**

# கிறிஸ்துமஸ் கவிதைகள்

**கிறிஸ்துமஸ்**
கருணையின் சிகரமாய்
கடவுளாய் பிறந்தவன்
கடவுளின் ஒளி!

வருந்தும் உள்ளங்களின்
வாழ்க்கை வழி காட்டியாய்
வாழ்வு கொடுத்த ஒளி!

வாயில் தோறும் மின்னொளியில்
ஒளிர்கின்ற நட்சத்திரத்தில்
வீடு தேடி வந்த ஒளி!

சுக்குநாறிப் புல்லாலான
குடிலில் அவதரித்த
புனித ஒளி!

கேட்டதும் கொடுத்து
தட்டியதும் திறந்து
தேடியே கண்ட ஒளி!

மானிடர்களை இரட்சிக்க
மாட்டு தொழுவத்திலே
மனிதனாய் பிறந்த ஒளி!

கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்கள்!!!

**அனுஷியா. மன்னார் மறைவாட்டம்**

**பிறப்பில் தனி ஒருவன்**
மாடடைக்கும் கொட்டிலில்
மார்கழிக் குளிரினில்
தேவமனிதன் பிறக்கிறான்
மனம் மட்டும் மாறட்டும்
எனப் பிறந்தான் ஒருவன்...!

அடித்தால் அடி உதைத்தால் உதை
வெட்டினால் வெட்டு - என்று
வன்முறை வளர்த்த தேசத்தில் - மறு
கன்னத்தை காட்டு உள்ளாடையையும்
கொடு என்று; சொன்ன தனி ஒருவன்!

பிறன் கண்ணின் துரும்பைப் பார்க்க
உன் கண்ணின் உத்திரத்தை நீக்கி விடு
இது வரை பாவம் செய்யாதவன்
முதல் கல் எறியட்டும்

எவரையும் தீர்ப்பிடாதே
உனக்கென்ன வேண்டுமென்பதை
பிறனுக்கும் கொடுக்கச் சொன்ன ஒருவன்!

மதத்தின் மதத்தை மிதித்து
மனிதத்தை மதித்தவன்!

அவன் ஒரு ஏழை தொழிலாளி,
சாதாரணன் - உன் எதிரிலேயே
தெருவில் அலைந்து திரியும்
வழிப்போக்கன்!

மாளிகையும் மஞ்சள் விளக்குகளும்
மல்லிகை மெத்தையும் மஞ்சமும்
கொஞ்சமும் தேவையில்லை யவனுக்கு!
நொறுங்கி விட்ட இதயங்களை
பொறுக்கிச் சேர்க்க..!
பிரிந்து விட்ட மனங்களை
இணைத்துச் சேர்க்க!

இனமென்றும் மொழியென்றும்
வீடென்றும் நாடென்றும்
மதமென்றும் கருகிய - மனங்களை
கட்டிக் கோர்க்க வருகிறான் மீண்டும்!

பிறக்க இடமின்றி ஒவ்வொரு - கதவாகத்
தட்டிய படியே வருகிறான் - திறந்து
வைப்போம் நம் மனக் கதவுகளை
மீண்டும் பிறக்கட்டும் மனிதம் - நம்
மனக்குடிலில்!

**அனுஷன்**

**இனிய கிறிஸ்து பிறப்பு நல் வாழ்த்துகள்**
பனிப்பூக்கள் குளிர்காற்றில்
பறக்கின்ற வேளை - இடையர்களுக்கும்
இமைசாய்த்து துயில்கின்ற மாலை
விண்ணிலே மீனொன்று வால் - நீட்டக்
கண்டு மென் மனசு இடையர்கள்
போனார்கள் மிரண்டு

இது வானம் ஒன்று பூமிக்கு வருகின்ற தேதி
வானதூதர் வந்தங்கு சொன்னார் அச்சேதி
மன்னர் குல மெத்தைகள் பலநூறு உண்டு
தூதர் சேதி சொன்னதுவோ ஆயர்களைக் கண்டு

ஆவின் குடில் ஆலயமாய் மாறியதை வியந்து
அரசர் குல ஆணி வேரும் ஆடியது பயந்து
வென்று விட வந்தவரைக் கொன்று விடக்
கட்டளை- அது

**கட்டளை என்பது ஒரு விளக்கு அறிவுரை என்பது ஒளி கண்டித்தலும் தண்டித்தலும் நல்வாழ்வுக்கு வழி. (நீதி.6:23)**

மீனொன்று கடல் குடிக்க ஆசைப்பட்ட கற்பனை

சாந்த முகம் சாய்ந்து கொள்ளள் சிரித்தது பசுக்கொட்டில்
காந்த முகம் பாய்ந்து வந்து அமர்ந்தது மனக் கட்டில்
ஞானியாரின் கைகளிலே மூன்று வகைப் பரிசு
மூவொரு தேவனவர் பிறப்பே மிகப் பெரிசு

வென்று விட வந்தவரைக் கொன்று விடக் கட்டளை-அது
கதிரவனைத் தின்றுவிட குயில் கொண்ட கற்பனை

**நகுல் பிறிமினி வவுனியா**

**புனித நாயகன் பிறந்த நாளில் இனிய வாழ்த்துகள்**

மனித மனமெனும் மயக்க நிலங்களில்
கருணைப் பூவனம்குழுமிப் பூத்திட
புனித நாயகன் பிறந்த நாளிதில்
இனிய வாழ்த்துகள் இதய வாசலில்

அலைகள் தொடுத்திடும்
கடலின் ஞானமாய்
நுரைகள் பூத்திடும்
பாலின் வெண்மையாய்

இரவைத் தேற்றிடும்
நிலவின் இனிமையாய்
உறவும் உலகமும்
வாழ வாழ்த்துக்கள்

மன்னிப்பை மக்களுக்கு அருளிய
மகா கடவுள் பிறந்த தினம்
மக்களின் துன்பம் மறைந்த தினம்
மகிழச்சி நிறைந்த தினம்

வானத்து எல்லையெங்கும் வண்ணப் பூச்சொரியும்
கார் காலத்து ஓர் இரவு களிப்பான மார்-கழியில்
ஞாலத்து இருளகற்ற நம் பாவம் தனை மீட்க
ஞாலத்தின் தேவைக்காய் கன்னி மகன் அவதரித்தார்

மாட்டுத் தொழுவத்தில் மகா ஒளிர்ந்ததுவே
அன்பின் செய்தியோடு அமைதி பரவியதே
உள்ளங்கள் யாவும் ஒன்றாய் கலந்திட
இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள் கூறிடுவோம்

**அனுஷ். இண்டிகா மாத்தளை**

**கிறிஸ்து பிறப்பும் கண்ணீர் தேசமும்**

இரண்டாயிரம் வருடத்து சரித்திரம்
மீண்டும் தொடர்கிறது
மீட்பரின் வருகை தேடி
தரம் கெட்ட போரினால்
வரம் இழந்த பாலஸ்தீனம்

இரக்கம் மறந்து
உறக்கம் இழந்த மானிடம்
இன்னும் மின்னும் அந்த தாரகையை
தேடி வாடுகிறது

மீட்பர் வர வேண்டும்
மீட்பும் வர வேண்டும்
வீடிவிழந்த மனிதருக்கு
விரைவில் விடிவு வேண்டும்

நாடிழந்த அகதிகளுக்கு
நன்மைகள் நிறைய வேண்டும்
உயிர்களுக்கு உத்தர வாதமும்
வயிற்றுக்கு உணவும் வேண்டும்

கிறிஸ்துவின் செய்தி
இரக்கத்தை நிறைக்கட்டும்
மனமாற்றம் பிறந்து
மனிதம் பிழைக்கட்டும்

செத்துப் பிழைக்கும்
மத்திய கிழக்கிற்கு
நத்தார் செய்திகள்
நன்மையை நிறைக்கட்டும்
நம்பிக்கையுடன்!

**ரவி அமிர்தன். கனடா**

**ஞானத்தை உன் சகோதரி என்று சொல் உணர்வை உன் தோழியாகக் கொள். (நீதி 7:4)**

# கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு மோயீசன் மூலம் கொடுத்த பத்துக்கட்டளை ஆன்மீகம்



ஏகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தம்முடைய மக்களான இஸ்ராயேலை மீட்ட பின், கடவுள் அவர்களுக்குப் பத்துக்கட்டளைகளைக் கொடுத்தார். அவர்களின புதிய தேசத்திற்கு ஒரு தார்மீக மற்றும் சடடபூர்வமான (வழிபாடு, அன்பு), வரையறுக்கவும், மற்றவர்களுடன் வவ்வாறு நன்றாக வாழ்வது என்பதை வழிநடத்தவும் (கொலை, திருட்டு, பொய், விபச்சாரம் இல்லாமல்), அவருடைய பரிசுத்த குணத்தை வெளிப்படுத்தவும், மனுக்குலத்திற்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை காட்டவும், யாரும் அவற்றை முழுமையாக கடைப்பிடிக்க முடியாது தன் மகன் இயேசுவின் துணையின்றி என்றும், இந்த கட்டளைகளை கடைப்பிடிக்க தன் மகன் மூலமே இரக்கத்திற்கு வழிவகுக்கும்.

எனவே புதிய இஸ்ராயேலாகிய எமது வாழ்வில் பத்துக்கட்டளை ஆன்மீகம் என்பது தார்மீக மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகளை அடிப்பை-டயாகக் கொண்ட ஒரு வாழ்க்கை முறையாகும். இது கடவுள் மற்றும் மற்றவர்களுடன் ஒருவரின் உறவை வழிநடத்துகிறது. அன்பு, நீதி, நேர்மை, மற்றும் விசுவாசம் போன்ற முக்கிய நற்பண்புகளை உள்ளடக்கி, அனுதினம் ஆன்மீக இணைப்பில் ஆழமான உறவை வளர்க்கின்றது. இது கொலை, விபச்சாரம் , திருட்டு மற்றும் பொய் சாட்சிக்கு எதிரான சட்டங்களை உள்வாங்குகிறது. அதே நேரத்தில் கடவுளின் வழிபாட்டை வழர்ப்பது, பெற்றோரை கௌரவிப்பது, ஓய்வு நாட்களை மதிப்பது, மற்றும் பொறாமை, பேராசை போன்ற உள்ளார்ந்த ஆசைகளை வெல்வது ஆகியவை அடங்கும்.

**தமிழில்**

1. உன் ஆண்டவராகிய கடவுள் நாமே. நம்மைத்தவிர வேறு கடவுள் இல்லை
2. கடவுளின் திருப்பெயரை வீணாகச் சொல்லாதே
3. கடவுளின் நாட்களைப் புனிதமாக அனுசரி
4. தாய் தந்தையை மதித்துப் பேணு
5. கொலை செய்யாதே
6. மோக பாவம் செய்யாதே.
7. களவு செய்யாதே
8. பொய் சாட்சி சொல்லாதே.
9. பிறர் தாரத்தை விரும்பாதே
10. பிறர் உடைமையை விரும்பாதே.

**ஆங்கிலத்தில்**

1. I, the Lord, am your God. You shall not have other gods besides me.
2. You shall not take the name of the Lord, your God, in vain.
3. Remember to keep holy the Lord's Day.
4. Honor your father and your mother.
5. You shall not kill.
6. You shall not commit adultery.
7. You shall not steal.
8. You shall not bear false witness against your neighbor.
9. You shall not covet your neighbor's wife.
10. You shall not covet your neighbor's goods.

**இந்த பத்துக்கட்டளைகளும் இரண்டு கட்டளைகளில் அடங்கும் :**

1. அனைத்திற்கும் மேலாகக் கடவுளை அன்பு செய்
2. உன்னை நீ அன்பு செயவது போல் உன் அயலவரையும் அன்பு செய் (மத் 22:37-40).

**கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்**

**நல்லார் தாம் எதிர்ப்பார்ப்பதைப் பெற்று மகிழ்வர் பொல்லார் எதிர்பார்ப்பதோ அவர்களுக்குக் கிட்டாமற் போகும். (நீதி10:28).**




**வன்முறையை நிராகரித்தல்,**
**அன்பு மற்றும் நீதி மூலம்**
**அமைதியைக் கட்டியெழுப்புதல்,**
**மற்றும் மோதலைக் குறைக்கும்**
**வாழ்க்கை முறையில்**
**இதை உள்ளடக்குதல்**

# CANADA TAMIL CATHOLIC NETWORK SERVICE

# கனடா தமிழ் கத்தோலிக்க வெளியீட்டக இணையம்

## செயற்பாடுகள்

01.சகல அரசசாசன விண்ணப்பங்கள் அனைத்தும் இங்கே நிரப்பிக்கொடுக்கப்படும்
02. குடியகல்வு குடிவரவு தொடர்பான வேலைகள் செய்துகொடுக்கப்படும்
03. "அன்பு மக்களே" சஞ்சிகை வெளியிடல்
05. புனித ஸ்தலங்களுக்கான யாத்திரை பயண ஒழுங்குகள் மேற்கொள்ளல்
06. வாரம்தோறும் பரம்பொருள் வானொளி நிகழ்வு
07. ஆன்மீக நிகழ்வுகள் விசேட நிகழ்வுகள் விளம்பரங்கள் ஒளிபரப்பு செய்யப்படும்
08. ஞானொடுக்கம் தியானம் கருத்தரங்குகள் நடாத்துதல்
09. ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு
10. ODSP: ONTARIO DISABILITY SUPPORT PROGRAMME
11. social assisiance (welfare)
12. volunteer support

## COUNSELLING

01. குடும்ப பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்கும் குடும்ப உளவளத்துணை
போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி வாழும் அனைவருக்குமான உளவளத்துணை

**உங்கள் தொடர்புகளுக்கு**
**647 - 852 - 3141**










# நத்தார் பண்டிகை

நத்தார் பண்டிகை என்பது கிறிஸ்தவ சமயத்தின் மிக முக்கியமான விழாக்களில் ஒன்றாகும். இது இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூரும் ஒரு பக்தி மிகுந்த மற்றும் மகிழ்ச்சியான நாளாகும். கிறிஸ்தவ சமய நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு இது அன்பு, அமைதி, சமாதானம், மற்றும் கருணை ஆகியவற்றின் அடையாளமாக உலகெங்கிலும் கொண்டாடப்படும் ஒரு காலாச்சார நிகழ்வாகவும் கொள்ளப்படுகின்றது.

கிறிஸ்துவின் பிறப்பு நத்தார் பண்டிகை டிசம்பர் 25 அன்று இயேசு கிறிஸ்து பிறந்ததைக் குறிக்கிறது. இது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் மையமாக விளங்குகிறது. கிறிஸ்தவ போதனைகள் இயேசு கிறிஸ்து போதித்த அன்பு, கருணை, இரக்கம், சுகவாழ்வு, போன்ற கொள்ளைகளின் நினைவாக நத்தார் பண்டிகை அனுசரிக்கப்படுகின்றது.

நத்தார் பண்டிகை என்பது கிறிஸ்தவர்களின் சமய பண்டிகை மட்டுமல்ல இது இனம், மதம், நிறம் என எந்த பாகுபாடும் இல்லாமல் பலரால் கொண்டாடப்படும் ஒரு கலாச்சார விழாவாக இன்று இருக்கிறது. பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் டிசம்பர் 25 அள்று நத்தார் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். எனினும் சில கிழக்கு மரபுவழி திருச்சபைகள் யூலியன் நாட்காட்டியின் ஜனவரி 7 அன்று இதனைக் கொண்டாடுகின்றன. கிறிஸ்தவர்கள் தேவாலயங்களுக்குச் சென்று சிறப்புப் பிரார்த்தனைகள் மற்றும் வழிபாடுகளில் பங்கெடுப்பார்கள்.

குடும்பம் மற்றும் உறவினர்கள், குடும்ப உறுப்பினர்களும், நண்பர்களும் ஒன்றுகூடி மகிழ்ந்து அன்பைப் பரிமாறிக் கொள்வார்கள். வீடுகளிலும், பொது இடங்களிலும், கிறிஸ்துமஸ் மரங்களை அலங்கரித்து, விளக்குகளால் ஒளிரச் செய்வார்கள்.

பரிசுப் பொருட்கள் பரிமாறிக் கொள்வதும், இனிப்புகள் மற்றும் கேக் போன்ற உணவுகளை உண்பதும் வழக்கம். நத்தார் பண்டிகையின் உண்மையான அர்த்தமான அன்பு, அமைதி, இரக்கம் ஆகியவற்றை எடுத்துரைத்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

எனவே நத்தார் பண்டிகை என்பது கிறிஸ்தவர்களின் சமய விழா மட்டுமல்லாமல் அது அன்பு, அமைதி, சமாதானம், ஆகிய உயரிய விழுமியங்களை உலகிற்கு எடுத்துரைக்கும் ஒரு பண்டிகையாகும். இது கிறிஸ்துமஸ் மரங்கள், பரிசுகள், மற்றும் மகிழ்ச்சியான கொண்டாட்டங்களுடன் மட்டுமன்றி பிறருக்கு உதவுவதன் மூலம் நற்செயல் புரியும் ஒரு பண்டிகையாகவும் விளங்குகிறது.

**பவளத்திலும் ஞானமே சிறந்தது நீங்கள் விரும்புவது எதுவும் அதற்கு நிகராகாது.**
**(நீதி.8:11)**



# புத்தாண்டு பெருவிழா

## இறைவனின் அன்னை தூய கன்னிமரியாள் பெருவிழா

***"கரு கொடுத்த கடவுளுக்கே உரு கொடுத்தவள்"***
***"கருவறையிலிருந்து கல்லறை வரை பின்தொடர்ந்தவள்"***

இப்புத்தாண்டில் ஆண்டவர் உங்களுக்கு ஆசி வழங்கி உங்களை காப்பாராக, ஆண்டவர் தம் திருமுகத்தை உங்கள் மீது ஒளிரச் செய்து உங்களுக்கு அருள் பொழிவாராக, ஆண்டவர் தம் திருமுகத்தை உங்கள் பக்கமாக திருப்பி உங்களுக்கு அமைதி அருள்வாராக. என்கிற உன்னதமான இறைவனின் ஆசீரை உரித்தாக்கிக்கொண்டு, இந்த புத்தாண்டு சகல விதமான ஆசீர்வாதங்களையும், அருள் நலன்களையும், நமக்கு பொழிய இறைவனிடத்தில் சிறப்பாக இந்த நாளில் ஜெபிப்போமாக.

அன்னை மரியாள் இறைவனின் தாய் என்கிற ஒரு உன்னதமான பெருவிழாவை தாயாம் திரு-அவையோடு இணைந்து நாம் ஒவ்வொரு புத்தாண்டின முதல் மாதம் முதல் நாளில் கொண்டாடுகின்றோம். ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவை பெற்றெடுத்த நாள் முதல் அவருடைய இறப்பு வரை ஆண்டவரோடு உடன் நடந்தவள் தேவதாய். இந்த தேவதாயை இறைவனின் தாய் என்று இந்த நாள் அங்கிகரிக்கிறது, கொண்டாடுகிறது, மகிழ்ச்சியடைகிறது. "ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய தாய் அன்னை மரியாள் வெறும் இயேசுவின் தாய் அல்ல மாறாக அவள் கடவுளின் தாய்'' என்கிற அங்கிகாரத்தை 431ம் ஆண்டு எபேசு சங்கம் கொடுக்கிறது.

1974ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி இந்த பெருவ-ிழாவை கொண்டாட தாயாம் திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கிறது. அன்னை மரியாள் எப்படி இறைவனின் தாயாக முடியும். இவற்றை நாம் எற்றுக் கொள்ள முடியுமா? இது எங்காவது விவிலியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், ஆம் திருவிவிலியத்தில் அழகாக கொடுக்கப்பட்டுள்ளது.

எலிசபெத்தம்மாள் பரிசுத்த ஆவியானவரால் முற்றிலும் ஆட் கொள்ளபபட்டவராய், அன்னை மரியாளை சந்தித்த போது, **"என் ஆண்டவரின் தாய்"** என்னிடம் வர நான் வாய்ப்பு பெற்றது எவ்வாறு'' என்று கேட்கின்றார் (லூாக்.1:43). இதில் எலிசபெத்தம்மாள் **"ஆண்டவரின் தாய்"** என்று விவிலியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், எலிசபேத்து தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவ்வாறு அன்னை மரியாளை குறித்து பேசினாள் என்பது தான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம்: "பெண்களுள் நீர் ஆசீர் பெற்றவள்; உம் வயிற்றில் வளரும் குழந்தை ஆசீர்பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் கேட்டதும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்'' என்றார் (லூாக்.1:42-45).

எனவே அன்னை மரியாள் கடவுளின் ஆசீர் பெற்றவள். நாம் வெறுமனே அன்னை மரியாளை கடவுளின் தாய் என்று அழைக்கவில்லை. மாறாக அதற்கான விவிலிய ஆதாரங்கள், மற்றும் வரலாற்று அனுபவங்கள் இருக்கின்றது. அவருடைய வாழ்க்கை நமக்கு அதற்கான சான்று பகர்கின்றது. இந்த உலகம் இது வரை கண்டிராத இறைவனுக்கு, அனைத்தையும் கடந்த உருவமில்லாத இறைவனுக்கு, மரியன்னை தனது தசை, எலும்பு, தொப்புள் சுவாசம் கொடுத்து, தனது இரத்தத்தை பாலாக்கி பகிர்ந்து, ***"கரு கொடுத்த கடவுளுக்கே உரு கொடுத்து"***, எம் கண்களால் பார்த்து தரிசித்து அனுபவிக்கும் பேற்றினை தந்ததால் அவள் பேறு பெற்றவளாக மாறுகிறாள்.

**தீய வழியில் ஈட்டிய செல்வம் பயன் தராது நேர்மையான நடத்தையோ சாவுக்குத் தப்புவிக்கும் (நீதி.10:2)**

அன்னை மரியாளையும் இயேசுவையும் நாம் தனித் தனியே பிரித்து பார்த்து விட முடியாது. காரணம் இயேசு என்கின்ற மீட்பர் உலகில் தோன்றுவதற்கு ஒரு பெண்ணின் அனுமதி தேவைப்பட்டது. அதனுடைய மகத்துவம் தான் பிறப்பு முதல் இறப்பு வரை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு தேவ தாய் உடனிருந்தது. அன்னை மரியாள் வெறுமனே ஒரு பெண் அல்ல. அவள் மீட்பரை இந்த உலகத்திற்கு தந்த தாய். அன்னை மரியாள் நம் மீட்பின் கருவியாக இருக்கிறாள், அன்னை மரியாள் இயேசுவோடு என்றென்றும் உடனிருந்தவள், அன்னை மரியாள் நமக்காக தொடர்ந்து இறைவனிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருப்பவள். இந்த அன்னை மரியாள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய வியாகுலங்களை தன்னுடைய உள்ளத்திலே சுமந்தவராக இருக்கிறாள்.

ஆம் அன்னை மரியாளின் சம்மதம் இல்லை என்றால் இயேசுவின் மனித அவதாரம் சாத்தியமாயிருக்குமா என்பதை ஆழமாக சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். ‘‘ஆற்றலாலுமல்ல, சக்தியாலுமல்ல, ஆண்டவரின் ஆவியாலே ஆகும் என்பதிலேயே தான் ஆன்னையவளின் சம்மதம் பிறந்தது. ஆகவே இயேசுவின் மனிதவதாரம் மரியன்னையின் சம்மதத்திலே கடவுள் கொண்ட மட்டற்ற நம்பிக்கையிலே பிறந்தது. கடவுள் தன் மகன் இயேசுவை மரியன்னை மூலம் பிறப்பிக்க, அன்னையின் சம்மதத்தைக் கேட்கின்றார். அன்னையின் சுதந்திரத்தை பறித்து, தனது மகனுக்கான தாய்மையை அவள் மீது திணிக்கவில்லை மாறாக அவளது சுதந்திரத்தை கடவுள் மதித்து தனது மகனுக்கான தாய்மையை கேட்கின்றார். கேட்பவர் கடவுளாக இருந்தாலும், கணவனற்ற தாய்மையை எந்த பெண் சம்மதிப்பாள். எனவே அன்னை மரியாளின் சம்மதம் இல்லை என்றால் இயேசுவின் மனித அவதாரம் சாத்தியமாயிருக்குமா என்கின்ற கேள்வியை விட, “கடவுள் கேட்டால் எனது சுத்திரத்தை மாத்திரமல்ல, இதோ உமது அடிமை என்று என்னையே முழுமையாக கொடுப்பேன்’’ என்று தன்னையே கொடுத்த மரியன்னையைப் போல ஒரு வீர விசுவாசமுள்ள ஒரு பெண் இல்லை என்றால் கடவுளின் மனித அவதாரம் சாத்தியமாயிருக்குமா என்னும் கேள்வியே சிறந்தது. எனவே திருவிவிலியத்தின் அடிப்படையில், அன்னை மரியாளே மீட்பினுடைய கருவியாக துணை நிக்கிறாள் என்பதை அழகாகவே எடுத்துக் கூறுகிறது இந்த நாளினுடைய பெருவிழா.

வியாகுலங்களை சுமந்து வந்த இந்த தாய், அவளின் பிள்ளைகளான நாம் நம்முடைய குடும்பங்களில் எதிர்கொள்ளும் அத்தனை துன்ப துயரங்களையும், கஸ்ரங்களையும், வேதனைகளையும் வலிகளையும் நம்மோடு சேர்ந்து தாங்கிக்கொள்கின்றாள். நாம் துவண்டு போகாமலிருக்க இறைவனிடமிருந்து அருளை இறைஞ்சி பெற்றுத்தருகின்றாள் என்பது தான் நாம் இந்த நிலையிலே புரிந்த கொள்ள வேண்டிய உண்மை.

கன்னியாக கருத்தரித்தவள், இயேசுவை பெற்றெடுக்க இடமின்றி ஒடோடி அலைந்தவள், ஆண்டவர் இயேசு கிறிஸ்து காணாமல் போனபோது தவியாய் தவித்தவள், பாடுகளின் போது ஆண்டவரோடு உடன் நின்றவள், இறந்த நிலையிலும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை தன் மடியிலே சுமந்தவள். **எமது அன்னை மரியாள் தனது மகன் இயேசுவை கருவறையிலிருந்து கல்லறை வரை பின்தொடர்ந்தவள்.**

எனவே மரியாள் இறைவனின் தாய் என்னும் இப்பெருருவிழாவை தாய் திருச்சபை பிறக்கின்ற ஒவ்வொரு புதுவருடத்தின் நுழைவுச்சீட்டாக தருவதன் நேக்கமானது, எவ்வாறு கடவுளின் மீட்புத்திட்டத்தை எம் அன்னை மரியாள் செவ்வனே நிறைவேற்ற, இந்த உலகில் எவருக்குமே வந்திராத சவால்களையெல்லாம் விசுவாசத்தால் வெற்றிகொண்டு, இயேசுவை பெற்று, பாதுகாப்பாக வளர்த்து, இறைவனின் திட்டத்திற்கிணங்க இயேசுவை தூய பலிப்பொருளாக ஒப்புக்கொடுத்து, தனது மகன் இயேசுவின் மூலம் இந்த உலகிற்கு இரட்ச்சணியம் கிடைப்பதற்கு காரணரான கடவுளின் வெற்றித்தாயாகினாளோ, அதே போல, பிறக்கின்ற ஒவ்வொரு புதுவருடத்திலும் எம் அன்னை மரியாள், அவளது பிள்ளைகளாகிய நாமும் எதிர்கொள்ளும் அனைத்து சவால்களிலும் எம்மோடு கூட இருந்து, அவள் எம்மை கரம்பிடித்து நடத்திச்சென்று, எம்மட்டில் இறைவன் கொண்டுள்ள திட்டங்களை நாம் செவ்வனே நடந்து கடந்து வாழ்வாங்கு வாழ அன்னை நிட்ச்சயம் இறைவனிடமிருந்து இறையருள் இறைஞ்சி, எம்மோடு கூடவே இருப்பாள் என்னும் ஆழமான நம்பிக்கையிலேயே எம் தாய் திரு அவை இந்த விழாவை இந்நாளில் தந்திருக்கின்றது.

*“Happy Day of God’s Mother”*

**அருட் பணி. தோமஸ் அந்தோனிப்பிள்ளை**

**ஞானமுள்ளோர் அறிவுரைகளை மனமார ஏற்பர் பிதற்றும் மூடரோ வீழ்ச்சியுறுவர். (நீதி10:8).**



**கனடா தமிழ் கத்தோலிக்க இணைய நிகழ்வு**

**புனித சிசிலியா இசைக்குழு "எம்மதமும் சம்மதம்"**

கனடா தமிழ் கத்தோலிக்க இணைய செயலாளராகவும், புனித சிசிலியா இசைக்குழு இணைப்பாளருமான சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை அவர்கள் வாரம் தோறும் நடாத்தும் புனித சிசிலியா இசைக்குழு, 2025 யூபிலி ஆண்டினை ஒட்டி ஆரம்பிக்கப்பட்ட காலங்களில், ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலேயே ஒரு இந்து மதத்தைச் சேர்ந்தவனாகிய நான் கலந்து கொண்டதை பெருமையாக எண்ணுகின்றேன்.

நான் முதலில் எண்ணினேன், இது ஒரு மதம் சார்ந்த குழுமம். இவர்கள் தமது மதத்தைச் சார்ந்தே நிகழ்ச்சிகளை நடத்துவார்கள் என்று. ஆனால் எந்த வித இன மத வேறுபாடுகளும் இன்றி, "சமயம் இல்லை சாதி இல்லை" என்ற கோட்பாட்டுடன் ஆரம்பித்ததை கண்டு வியப்புற்றேன். சகோ. மரீனா இன்று வரை இன மத வேறுபாடுகளின்றி இந்த நிகழ்வை நடாத்திவருவதையிட்டு பாராட்டி நிற்கின்றேன்.

இந்நிகழ்ச்சியில் இஸ்லாமிய, இந்துமத, கத்தோலிக்க பாடல்களை வேறுபாடுகளின்றி எப்பாடலையும் பாடலாம் என்கின்ற இவரது கொள்கை பாராட்டப்பட வேண்டும். இந்த நிகழ்விலே, நலமுடன் வாழ கொடுக்கப்படும் யோகா ஆசன பயிற்ச்சிகளும் இன்னும் சிறப்பாக வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே.

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் நடாத்தும் இந்த சிறப்பு நிகழ்ச்சி பல தடை-களை தாண்டியும் ஒரு வருடத்தை பூர்த்தி செய்திருக்கறது என்றால் அது சகோ. மரீனாவின் விடாமுயற்ச்சியே காரணமாக அமைகின்றது. சகோ. மரீனாவிற்குள் பல திறமைகள் புதைந்திருப்பதைக் கண்டு வியந்தேன்.

எல்லோரையும் ஒரு தாய் பிள்ளைகள் போல ஒரு குடையின் நிழலின் கீழ் ஒன்றிணைத்து இந்த நிகழ்வை நடத்த வேண்டும் என்கின்ற இவருடைய நல்ல மனதை பாராட்டுவதோடு, இது போன்ற முதியவர்களுக்கும் அனைவருக்கும் நன்கு பயன் தரக்கூடிய இச்சற்கத்தின் இந்நிகழ்வு பல்லாண்டு வெற்றிகரமாக தொடர இறைவன் அருள் புரிய வாழ்த்துகின்றேன்.

**உங்கள் பழனி சண்முகம்**

## "தமிழே உலகின் தாய் மொழி என்று பறையடித்தோதிய பன்மொழிப் பண்டிதன் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் 150 ஆண்டு நிறைவு

புனித பற்றிக்ஸ் கல்லூரியினால் உருவாக்கபபட்ட தமிழ் முத்துக்களுள் முதல்வாரன நல்லூர் சுவாமி ஞானப்பிகாசர் அவர்களின் 150 ஆண்டு நிறைவினில், எங்கள் பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடும் இவ்வேளையில் அடிகளாரை நினைவு கூர்வது மிகப் பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

சொல் என்ற மலரிலே பொருள் என்ற புதுமது சொட்டிச் சுரக்கும் அமிர்த சுரபியாய் ஒளிர்ந்து, ஈழநாடு பெருமை கொள்ள, தமிழர் உலகம் வாயூற, ஆயிரம் பதினாயிரம் உயரிய தமிழ் சொற்களால், சொற்தொடர்களால் தமிழ் அன்னையை அலங்கரித்த பெருமைக்குரியவர் தான் எங்கள் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர். இலங்கையிலே மானிப்பாய் என்ற வளமிக்க கிராமத்தில், 1875 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 30ஆம் தேதி சாமிநாத பிள்ளை தங்கமுத்து தம்பதியினருக்கு மகனாக வைத்தியலிங்கம் என்னும் இயற்பெயருடன் உயர் ஜாதி இந்து குடும்பத்தில் அவதரித்தவர்தான் எங்கள் ஞானப்பிரகாசர். இளவயதினில் தன் தந்தையை இழந்த நிலையில் அவரது தாயார் தம்பிமுத்து என்னும் கிறிஸ்தவரை மறுமணம் செய்து அச்சுவேலிக்கு இடம் பெயர்ந்து இருந்தனர். அந்தக் காலப் பகுதியில் தான் அடிகளார்க்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு, அவரது தாய் தந்தையரினால் ஞானப்பிரகாசர் என்று பெயர் சூட்டப்பட்டு கிறிஸ்துவுக்குள் தனது வாழ்க்கையை தெடங்கினார். அந்நாட்களில் அச்சுவேலியில் இயங்கி வந்த அமெரிக்கன் மிஷன் பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியை கற்று வந்தார். கல்வியிலும் குறிப்பாக தமிழ். இசை, நாடகம், போன்றவற்றில் அதிக ஈடுபாடும் ஊக்கமும் இருந்த காரணத்தினால், அவர் வளர்ப்பு தந்தையும் பள்ளி நிர்வாகமும் அவரை புனித பத்திரிசியார் கல்லூரியில் படிக்க வைத்தார்கள்.

**மட்டுக்கு மிஞ்சின பேச்சு அளவற்ற தீமைகளை விளைவிக்கும் தம் நாவை அடக்குவோர் விவேகமுள்ளோர். (நீதி.10:19)**

கல்வியின் மேலும், தமிழ் ஆங்கில மொழியின் மேலும் அதீத பற்று கொண்ட அடிகளார், சிறப்பான முறையில் கற்றுத் தேர்ச்சி அடைந்தார். தொழில் தேடும் இளம் பருவத்தில் இலங்கை ரயில்வே திணைக்கழத்தினால் நடாத்தப்பட்ட கணக்காளர் தேர்வில் அகில இலங்கையிலும் முதல்வராக வெற்றி பெற்று, இலங்கை கல்கமுவ என்ற பிரதேசத்தில் கணக்காளராக சேவையாற்ற பணி நியமனம் கிடைத்து அங்கு சிறிது காலம் பணியாற்றினார்.

புனித பற்றிக்ஸ் கல்லூரியில் அவர் கல்வி பயின்ற பொழுதே அவருக்கு கல்வியுடன் கூடிய ஆன்மீகத்தில் அதீத ஈடுபாடு இயல்பாக ஏற்பட்ட காரணத்தினால், தனது தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, 1894ம் ஆண்டளவில் குருமடத்தில் சேர்ந்து இறை இயலை ஆர்வத்தடன் கற்று தேர்ச்சி அடைந்தார். இறைவனின் அழைப்பை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு 1901 இல் குருவாக திருநிலை படுத்தப்பட்டு, ஆன்மீக வாழ்வுக்குள் அடி எடுத்து வைத்து தன்னை முற்று முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்துக்கொண்டார். அவர் குரு மடத்தில் இருந்த பொழுதே சமஸ்கிருதம், இலத்தீன் மற்றும் ஆசியக் கண்டத்தின் மொழிகளையும் ஆர்வத்துடன் பயின்று பாண்டித்தியமும் பெற்றார். அடிகளார் அவர்கள் பல மொழிகளை எழுதவும் பேசவும் தெரிந்திருந்தார் என்பது மிக மிக ஆச்சரியமூட்டும் உண்மை.

அடிகளார் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் பயனாக, உலகின் மொழிகளுக்குள் எல்லாம் முன்னோடியாக மூத்த மொழியாக இருப்பது எங்கள் தமிழ் மொழியே என்றும், தமிழ் மொழியின் சொற்கள் உருமாறி இருந்தாலும் அதன் கருமாறாது மாற்று மொழிகளில் கலந்திருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது என்பதனை ஆதார பூர்வமாக நிரூபித்து, தனது ஒப்பியல் அகராதி மூலம் உலகிற்கு அறிவித்த பெருமை யாழ் புனித பற்றிக்ஸ் கல்லூரி கண்டெடுத்த முத்தமிழ் அறிஞர்களில் முதல்வாரன எங்கள் ஞானப்பிரகாசரையே சாரும் என்று கூறுவது ஒரு பொழுதும் மிகை ஆகாது. சொற் பிறப்பு ஒப்பியல் அகராதியை உருவாக்கிய அடிகளார் வருங்கால சந்ததிக்காக மிகுந்த தொலை நோக்குடன் செயல்பட்டார். அந்த காலத்தில் எந்தவித நவீன தொழில் நுட்பம் இல்லாத பொழுதிலும், தனது பெரும் விடா முயற்சியினால் தமிழ்த் தாய்க்கும் தமிழினத்திற்கும் செய்த சேவையை தமிழர்களாகிய நாமும் தமிழ் கூறும் நல் உலகும் நன்றியுடன் நினைவு கூர நிச்சயம் கடமைப்பட்டுள்ளோம். அடிகளாரின் அபரிமிதமான இந்த திறமையை கண்டு உணர்ந்த உலகின் பல அறிஞர்கள், கவிஞர்கள், கல்விமான்கன் அவரை பாராட்ட ஒருபொழுதும் தவறியதில்லை.

இந்த வகையில் தமிழினமே போற்றுகின்ற கவியோகி, மகரிஷி, என்று தமிழறிஞர்களால் போற்றப்படும் சுத்தானந்த பாரதியார் அடிகளாரை பற்றி எழுதிய கீழ்காணும் ஒரு சிறு கவிதையே இதற்கு சான்று பகர்கிறது.

***பன்மொழி புலவர் ஞானப்பிரகாசர் செந்தமிழ் மொழியே செக மொழிமிகுயிரென! விளக்க புகுந்த வித்தகச் செம்மல்! சிலுவை அடியான்! சீரிய நண்பன்! எம் மதத்திற்கும் சம்மதம் சொல்லும்! அன்பு வழயே ஆருயிர் வழியென கண்டு நடந்த கண்ணியச் சொல்லான்! பைந்தமிழ் வளர்த்த பன்மொழி புலவன் ஞானப்பிரகாசர்.***

தமிழ் மொழியில் அன்பு, அறிவு மிக்க ஒரு அருள் துறவி.

எங்கள் வருங்கால சந்ததியினருக்கு எங்கள் மொழியின் தொன்மையை, அதன் பெருமைமையை, அதன் அருமையை, அதன் இனிமையை உணர வைத்த உன்னதர் ஞானப்பிரகாசர் என்பதை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. ‘‘தமிழ் தான் உலகின் தாய்மொழி என்று பறையடித்தோடிய இந்தப் ‘‘பன்மொழி பண்டிதனை’’ உருவாக்கிய எங்கள் புனித பற்றிக்ஸ் கல்லூரிக்கு சிரம் தாழ்த்தி மேலும் பல தமிழ் முத்துக்களை உருவாக்கும்படி அதன் பாதுகாவலராம் புனித பத்திரிசியாரிடம் அருள் வேண்டி நிற்கும்

*நீர்வேலி மதியன் அந்தோனிப்பிள்ளை*
*(வீரகத்திப் பிள்ளை அவர்களின் பூட்டன்)*

*(Founder member, Canada St Patrick's college Alumni association Jaffna Sri Lanka)*

*(வீரகத்திப் பிள்ளை அவர்களுக்கும் பண்டிதன் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுக்கும் இடையில் இருந்த அந்நியொன்னிய உறவும் நட்பும், சுவாரஷ்ய நிகழ்வுகள் குறித்தும் வருகின்ற வருடம் 2026 தை மாதம் வெளிவர இருக்கும் ‘‘அன்பு மக்களே’’ இதழில் இந்த கட்டுரையின் இரண்டாம் பாகமாக வெளிவரும்)*

**ஆண்டவரின் ஆசி செல்வம் அளிக்கும் அச்செல்வம் துன்பம் கலவாது அளிக்கப்படும் செல்வம். (நீதி.10:22)**

# கத்தோலிக்க திருஅவையின் 2026 ஆம் ஆண்டிற்கான முக்கிய கருப்பொருள்களும் நிகழ்வுகளும்

கத்தோலிக்க திருச்சபை 2025 ஜீபிலி ஆண்டைப் போல ஒரு தனித்துவமான கருப்பொருளைக் கொண்ட ஆண்டாக 2026ம் ஆண்டினை அறிவிக்கவில்லை. அதற்கு பதிலாக திருத்தந்தை லியோ XIV, 2026 இல் நடைபெறும் பல குறிப்பிடத்தக்க வருடாந்த அனுசரிப்புகளுக்கான குறிப்பிட்ட கருப்பொருள்களை அறிவித்துள்ளார். 2025 ஆம் ஆண்டு ஜீபிலி ஆண்டு சழற்ச்சிக்கான பெரிய கருப்பொருள்களும் இதில் உள்ளன. 2026 ஆம் ஆண்டு (El Camino Real) (நம்பிக்கை) என்பது நல்லொழுக்கங்களை ஆராய்வதற்கான பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

**2026 ஆம் ஆண்டிற்கான முக்கிய கருப்பொருள்களும் நிகழ்வுகளும்**

**உலக அமைதி தினம்** (ஜனவரி 1 - 2026)

**கருப்பொருள்:** உங்கள் அனைவருக்கும் அமைதி உண்டாகட்டும். நிராயுதபாணியான மற்றும் நிராயுதபாணியாக்கும் அமைதியை நோக்கி

**நோக்கம்:** வன்முறையை நிராகரித்தல், அன்பு மற்றும் நீதி மூலம் அமைதியைக் கட்டியெழுப்புதல், மற்றும் மோதலைக் குறைக்கும் வாழ்க்கை முறையில் இதை உள்ளடக்குதல்

**ஜீபிலி ஆண்டு 2025 சுழற்சி**: 2026 கருப்பொருள் "El Camino" (நம்பிக்கை).

**சூழல்:** இது முக்கிய நற் பண்புகளை மையமாகக் கொண்ட ஜீபிலி ஆண்டு 2025 வரை செல்லும் நீண்ட "விசுவாச யாத்திரையின்" ஒரு பகுதியாகும்.

**கிறிஸ்தவ ஒற்றுமைக்கான பிரார்த்தனை வாரம்:** ஜனவரி 18 அன்று தொடங்கும் 2026 அனுசரிப்புக்கான கருப்பொருள் உங்கள் அழைப்பின் ஒரே நம்பிக்கைக்கு நீங்கள் அழைக்கப்பட்டதைப் போலவே ஒரே உடலும் ஒரே ஆவியும் உள்ளது (எபேசி 4:4)

**உலக மிஷன் ஞாயிறு** (அக்டோபர் 18 - 2026)

**கருப்பொருள்:** "கிறிஸ்துவோடு பணிவாழ்வில் ஒன்றித்து"

**முக்கியத்துவம்:** உலக மிஷன் ஞாயிற்றுக் கிழமையின் 100 ஆண்டுகளைக் கொண்டாடுகிறது. மற்றும் சுவிஷேசப் பணிக்காக கிறிஸ்துவில் விசுவாசிகளின் ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது.

**உலக தகவல் தொடர்பு தினம் :** 2026 உலக தகவல் தொடர்பு தினத்திற்கான கருப்பொருள், தொழில் நுட்பம், மனித தொடர்பு மற்றும் இருப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்குப் பதிலாக ஆதரவளிப்பதை உறுதி செய்வதில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக AI போன்ற தொழில் நுட்பம் மனித குலத்திற்கு சேவை செய்வதையும், மனித குரலை மாற்றாமல், திருச்சபை சமூக போதனைகளைப் பயன் படுத்துவதையும் உறுதி செய்வதில் கவனம் செலுத்துகிறது.

**உலக குழந்தைகள் தினம்:** இரண்டாவது உலக குழந்தைகள் தினம் 2026 இல் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அமைதி வரவேற்பு மற்றும் எதிர்காலத்திற்காக ஏங்கும் உலகின் கதாநாயகர்கள் என குழந்தைகளின் குரல்களைக் கேட்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

**உலக நோய்வாய்ப்பட்டோர் தினம்:** இந்த நாளுக்கான கருப்பொருள் சமாரியரின் இரக்கம் மற்றவரின் வலியைத் தாங்கி அன்பு செலுத்துதல் எனவே 2025 ஜுபிலி போன்ற சமீபத்திய முக்கிய நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆழ்ந்த ஒற்றுமை உண்மையான அமைதி மற்றும் தொடர்ச்சியான மிஷனரி வைராக்கியத்திற்கான போப்பாண்டவரின் அழைப்புகளால் 2026 குறிக்கப் படுகிறது

**ஆண்டவரின் வழி நல்லார்க்கு அரணாகும் தீமை செய்வோர்க்கோ அது அழிவைத் தரும். (நீதி.10:29)**

# கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் (https://ctcnw.org/)
## 2026ம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்

திரு அவை, 2025 ஜீபிலி ஆண்டைப் போல ஒரு தனித்துவமான கருப்பொருளைக் கொண்ட ஆண்டாக 2026ம் ஆண்டினை அறிவிக்கவில்லை. அதற்கு பதிலாக திருத்தந்தை லியோ XIV 2026 இல் நடைபெறும் பல குறிப்பிடத்தக்க வருடாந்த அனுசரிப்புகளுக்கான குறிப்பிட்ட கருப்பொருள்களை அறிவித்துள்ளார். 2026 ஆம் ஆண்டு (El Camino Real) (நம்பிக்கை) என்பது நல்லொழுக்கங்களை ஆராய்வதற்கான பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

**1. முதல் சனிக்கிழமை**

ஒவ்வொரு முதல் சனிக்கிழமையும் திரு இருதய தேவாலயம் கிங் சிற்றியில் மாலை 3.00 க்கு மேரிலேக் குழுவினரால் தேவநற்கருணை எழுந்தேற்றமும் அதை தொடர்ந்து திருப்பலியும் முடிவில் ஜெபமாலையும் நடைபெறும்.

**2. தவக்கால நிகழ்வுகள்**

தபசு காலத்தில் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் மாலை 5.45 மணிக்கு தமிழ் சிலுவைப்பாதை "எங்கே சுமந்து போனீர்" என்னும் பாரம்பரிய பாடலுடன் மோட்ச்சபாதையின் வழிகாட்டலில் நடைபெறும்.

**3. பெரிய வியாழன்**

பெரிய வியாழன் அன்று இரவு 11 மணிக்கு தேவநற்கருணை ஆராதனை லூர்து மாதா ஆலயத்தில் தமிழில் நடைபெறும்

**4. பெரிய வெள்ளி** (சிலுவைப்பாதை)

பெரிய வெள்ளி அன்று காலை 8.30 மணிக்கு தமிழ் சிலுவைப்பாதை லூர்து மாதா ஆலயத்தில் நடைபெறும்

**5. ஞானொடுக்கம்**

பங்குனிமாதம் தவக்காலத்தின் முதற் சனிக்கிழமை தவக்கால ஞானொடுக்கம் தமிழில், மேரிலேக்கின் குழுவினரால் தலைமைதாங்கி நடாத்தப்படும்.

**6. ஐரோப்பிய திருப்பயணம்**

ஐரோப்பிய திருப்பயணம் வைகாசி (Month of May), மாதம் 02ம் திகதி ஆரம்பித்து வைகாசி மாதம் 22ம் திகதி முடிவடையும். வத்திக்கான் நகரில் ஆரம்பித்து பிரான்ஸ் ஸ்பெயின் ஊடாக வந்து இறுதியில் போர்த்துக்கல் நாட்டில் நிறைவடையும்.

அடுத்த நாள் 03ம் திகதி வத்திக்கான் நகரை தரிசித்தல் : கத்தோலிக்க திருச்சபையின் உலக புகழ்பெற்ற சரித்திரம் வாய்ந்த அதிசயங்களை தரிசித்தல்.

பின் பரிசுக்கு சென்று வெள்ளைத்தேவாலயம், நெப்போலியன் நூதனசாலை மற்றும் புனித பெனடிக்ற்றம்மாவின் ஆலயத்தை பார்வையிடல்.

லூர்து நகருக்கு சென்று தூய தண்ணீரில் மூழ்கி எழுந்து குணம் பெறும் நிகழ்வில் பங்கெடுத்தல்.

**ஸ்பெயினுக்கு சென்று**

புனித அந்தோனியார் தனது குருத்துவ கல்வி பயின்ற குருமடத்தை பார்வையிடல்

புனித யாகப்பரின் திருத்தலம் மற்றும் புனித சந்தியாகு தேவாலயம் பார்வையிடல் (Spain)

புனித பாத்திமா அன்னையின் தேவாலயம் தரிசித்தல்

பின் பற்றிமா மாதாவை தரிசித்துவிட்டு லிஸ்பன் நகருக்கு சென்று புனித அந்தோனியார் தேவாலயத்தை தரிசித்த பின் வைகாசி மாதம் 22ம் திகதி ரொறொன்ரோவுக்கு திரும்புவோம்.

லூர்து மாதா தேவாலயத்தின் ஆனிமாதம் 11 12 13 ம் திகதிகளில் புனித அந்தோனியார் திருவிழா கொண்டாடப்படும்.

**7. கருத்தரங்கு**

அகில உலக போதை ஒழிப்பு கருத்தரங்கு ஆனிமாதம் 27ம் திகதி நடைபெறும். மேலதிக தகவல்கள் கனடா தமிழ் கத்தோலிக்க இணையத்தில் வெளியாகும்

**8. யூலை மாதம் 11ம் திகதி நடைபெறுகின்ற தமிழ் யாத்திரை புனித பத்திமா ஆன்மீக பணியகத்தால் நடாத்தப்படும் :**

மன்னார் ஆயர் வண. ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை ஆண்டகை பிரதம விருந்தினராக பங்கெடுப்பார்.

**கடவுளுக்கு அஞ்சி நடப்போரை ஒருபோதும் அசைக்க இயலாது பொல்லாரோ நாட்டில் குடியிருக்கமாட்டார். (நீதி.10:30)**

**9. யூலை மாதம் 18ம் திகதி மிடல்ன்ட் தேசிய வேதசாட்சிகள் திருயாத்திரை :**

தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் கனேடிய தேசிய மிடல்ன்ட் வேதசாட்ச்சிகள் திருத்தலத்திற்கான திருயாத்திரை. தமிழில் நடைபெறும். மன்னார் ஆயர் வண. ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை ஆண்டகை பிரதம விருந்தினராக பங்கெடுப்பார்.

**10. குறிப்பு :**

பல வருடங்களாக யாத்திரைக்கான சிறந்த பேரூந்து ஒழுங்குகளை நாம்மேற்கொண்டு வருகின்றோம். ஆகவே பேரூந்து ஆசன பதிவுகளுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் : தோமஸ் டேவிட் - 647 852 3141/ சகோ.மரீனா - 647 782 0855

**11. ஆவணி மாதம் கனேடிய தேசியத் திருயாத்திரை**

ஆவணி மாதம் 1,2,3ம் திகதிகளில் ஆன்மீகத்திற்கும் அறிவிற்கும் ஆதரவளிக்கும் ஆன்மீகத்திருயாத்திரை : புனித சூசையப்பர் தேசிய யாத்திரைத் ஸ்தலம் (மலைக் கோவில்), புனித மேரி மெடலீன் தேசிய திருயாத்திரை ஸ்தலம், புனித அன்னம்மாள் தேசிய திருயாத்திரைத் ஸ்தலங்கள் போன்றவற்றுக்கும் திருப்பயணம் நடைபெறும்.

**12. மடுத்திருவிழா**

ஆவணிமாதம் 15ம் திகதி மேரி லேக்கில் மடுத்திருவிழா நடைபெறும்.

(Option).

**13. அமெரிக்க பயணம்**

புரட்டாசி மாதம் 5,6,7ம் திகதிகளில் குறோசிற்றி பக் டு ஸ்கூல் ("The Back To School') புனித வெற்றி மாதா, புனித பற்றி, மாதா கண்மணிமாதா ஆலயங்களுக்கு யாத்திரைப்பயணம் நடைபெறும். பின் பென்சலவேனியாவின் குறோசிற்றியில் அமைந்துள்ள "Prime Mall" இல் பிரசித்திபெற்ற வணிகச் சின்னம் (Brand) கொண்ட பொருட்களையும் கொள்வனவு செய்துவிட்டு திரும்புவோம்.

**14. இந்திய பயனம்**

புரட்டாசி மாதம் 02 முதல் 23ம் திகதி வரை இந்தியாவிற்கான பயனம் நடைபெறும் : சென்னையில் தரையிறங்கி பிரசித்திபெற்ற இடங்களை பார்வையிட்ட பின் திருச்சி, மதுரை, பாண்டிச்சேரி, தூத்துக்குடி, கேரளா போன்ற இடங்களையும் அங்குள்ள பிரசித்திபெற்ற இடங்களையும் தரிசித்த பின், கன்னியாகுமாரி வேளைநகருக்குச்சென்று அன்னை வேளாங்கன்னியின் திருவிழா திருப்பலியில் பங்கெடுத்து நாடு திரும்புவோம்.

**15. குறிப்பு :**

இவ் இந்திய பயனத்தை மேற்கொள்ள விரும்புவோர், ஆடிமாதம் 20ம் திகதிக்கு முன் உங்களை பதிவு செய்து கொள்ளுங்கள். முன் பதிவு செய்பவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

**16. ஐப்பசியில் தேசிய நன்றித்திருப்பலி நடைடெபறும்.**

**17. ஆத்துமாக்களின் நினைவு தினம்**

கார்த்திகை மாதம் 2ம் திகதி இறந்த ஆத்துமாக்கன் நினைவுத் திருப்பனி புனித லூர்து மாதா தேவாலயத்தில் நடைபெறும்.

**16. தமிழில் நத்தார் திருப்பலி**

புனித ஆரேக்கிய மாதா தமிழ் பங்கு, புனித பற்றிமா மாதா பங்கிலும், 24ம் திகதி இரவு 8.00 மணிக்கு தமிழ் கரோல் பாடல்கள் அதனைத் தொடர்ந்து 8.30 மணிக்கு தமிழில் திருப்பலியும் நடைபெறும்.

**18. தமிழில் புதுவருடத் திருப்பலி**

31ம் திகதி இரவு 11.00 மணிக்கு தேவநற்கருணை எழுந்தேற்றம் (பாவ மன்னிபப் வழிபாடும் நன்றி வழிபாடும்) நடைபெற்று அதனைத் தொடர்ந்து 12.00 மணிக்கு லூர்து மாதா ஆலயத்தில் புதுவருட திருப்பலியும் நடைபெறும்.

**19. "அன்பு மக்களே" சஞ்சிகை**

2025–2026 ஆண்டிற்கான, கனடா தமிழ் கத்தோலிக்க இணையத்தால் வெளியிடப்படும் "அன்பு மக்களே" சஞ்சிகை, பல சவால்களுக்கு மத்தியில் இவ்வாண்டும் வெளிவருவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். ஆயினும் இந்த சஞ்சிகை வெளிவருவதில் கத்தோலிக்க

**கடவுளுக்கு அஞ்சி நடப்போரின் வாயினின்று ஞானம் பொங்கி வழியும் வஞ்சகம் பேசும் நா துண்டிக்கப்படும். (நீதி.10:31)**

மக்களாகிய உங்களது பங்களிப்பும், ஈடுபாடும் மிக மிக குறைவாக இருப்பதையிட்டு ஆச்சர-ியமும் கவலையும் அடைகின்றோம். எனினும் இனிவரும் காலங்களிலாவது, உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்காக, கனடா ரொறொன்ரோ நகரிலிருந்து, உங்களை விசுவாச பாதையில் வழிநடத்தி, ஆன்மீக வழிகாட்டியாக வெளிவரும் இவ் “அன்பு மக்களே” சஞ்சிகையின் வெளியீட்டில் உங்களது ஆக்கங்களையும், பங்கழிப்பையும் வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம் (நன்றி).

**20. கனடா தமிழ் கத்தோலிகக் இணைய நிகழ்வுகள் :**

கனடா ரொறொன்ரோ நேரத்தின் படி மாலை 3 மணி முதல் 4.30 வரை நாளாந்தம் நடைபெறுகிறது. இறை இரக்க ஜெபமும் ஜெபமாலையும் நாளாந்த நற்செய்தி வாசிப்பும் விளக்கமும்.

Viber தொடர்பாடல் ஊடாக உலகளாவிய ரீதியாக இணைந்து நடாத்தும் ஜெப வழிபாடு. உலகின் எந்தப்பகுதியலிருந்தும் இணைந்துகொள்ளலாம்.

## புனித செசிலியா பாடகர் இசைக் குழு 2025.

ஒரு முறை பாடுவதுமு இரண்டு முறை செபிப்பதற்கு சமம்” மார்கழி மாதம் 20ம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகி உடற் பயிற்சி காலை 9.15 முதல் காலை 9.45 வரை நடைபெறும். அதனைத் தொடர்ந்து மார்கழி 29,2025 அன்று நடைபெறும் 1வது புனித சிசிலியா இசைக் குழு, என்ன பாடல்களை பாடுவீர்களோ அந்த பாடலை zoom Meeting பங்கு பற்றிப் பாடலாம், வாருங்கள் பாடுங்கள்.

**இசைக் குயிலின் பாடல்கள்**

காலை 10 மணி தொடக்கம் 12.15pm வரை ஒழுங்கு செய்துள்ளது

,y;

,y.

என்ன பாட்டு பாட உள்ளீர்களோ உங்கள் பெயர்களையும் பாடலையும் பதிவு செய்யவும் பாட விரும்புபவர்கள் முன்கூட்டியே* பாடல்களை பதிவு செய்வது விரும்பத்தக்கது .

இசையால் இறைவனைப் புகழ்வோம்

வாருங்கள் வந்து பாருங்கள் பாடுங்கள்

**Zoom Meeting ID - 825 4694 2145**

**Password - 33 30 10**

**அன்புடன் சகோதரி**
**மரினா அந்தோனிப்பிள்ளை**







**எனவே, நீ நல்லாரின் நெறியில் நடப்பாயாக! நேர்மையாளரின் வழியைப் பின்பற்றுவாயாக! (நீதி.2:20)**

## கனடா தமிழ் புலம்பெயர் மக்களுக்கு!

கடந்த நாற்பது ஆண்டுகளாக (40 Years), நீங்கள் நமது தமிழ்த் தாயகத்தில் வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பண உதவிகளை செய்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

நமது தமிழர் தாயகத்தில் வாழ்கின்ற உங்கள் உறவுகள் தற்சமயம் பொருளாதார கஷ்ரங்களுக்கும் இயற்கை அனர்த்தங்களுக்கும் முகம் கொடுத்து சொல்லொன்னா துயர் அனுபவிக்கும் இந்த வேளையில், முன்னையதை விட நீங்கள் தாராள மனத்துடன் அதிக பண உதவிகளை அனுப்பி, அவர்கள் துன்பங்கள் அகன்று இன்பமாய் வாழ ஆவன புரிய கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் உங்களை அழைத்து நிற்கின்றது.

அத்துடன் எமது கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் (CTC NETWORK), கனடா அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நி-றுவனம். கனடா அரச இறைவரித்திணைக்கள சட்ட செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் பெற்றவர்கள். ஆதலால், எமது கனடா தமிழ் கத்தோலிக்க இணைய (CTC NETWORK) மின்னஞ்சல் tamilcatholicpublication@gmail.com மூலம் தமிழர் தாயகத்தில் வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு இம்மாதம் மார்கழி 30ம் திகதிக்கு முன்னர் பண உதவிகளை அனுப்புவோருக்கு, 2025ம் ஆண்டிற்கான பற்றுச்சீட்டு வழங்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். அத்துடன் எமது கனடா தமிழ் கத்தோலிக்க இணைய (CTC NETWORK) நிகழ்வுகளில் நீங்கள் பங்குகொண்டு அன்பளிப்பு செய்யும் பணத்திற்கு எமது கனடா தமிழ் கத்தோலிக்க இணையத்தின் பற்றுச்சீட்டுக்கள் “REVENUE CANADA TAX CREDIT” பெறவேண்டிய முறையில் தரப்படும் என அறியத்தருகின்றோம்.



**தகவல் : ஆசிரியர் தோமஸ் டேவிட்**














Merry Christmas
&
Happy New Year
2026



ACCIDENT
HAPPENS!
But your injuries don't
have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident?
Questions?
Get Answers @
ARAM
Legal Services
Professional Corporation
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca


AJAX
CREMATORIUM
& VISITATION CENTRE
Pickering, Ajax, Oshawa, Whitby,
Scarborough & Markham
HWY401
BRAMPTON
CREMATORIUM
& VISITATION CENTRE
Mississauga, Brampton, Caledon ,Vaughan
HWY 401,407,427
MELWYN STANISLAUS DHARMA B.COM
LICENSED FUNERAL DIRECTOR
647-713-6049


US TAILORING
Our Services
-Saree Blouse
-Christian Wedding Dress
-Dance Costumes
-Jackets
-Sofa Covers
-Curtain
Online & In Person Tailoring Classe
Phone : 416 769 2207
Mail ID : rageestella126@gmail.cor
FB : US Tailoring Inc
Instagram : ustailoring
Address : 216 Goodman, Dr, Osha


Jeni & Paul
Enterprises inc.
Airlines Tickets, Visa
Consultation, Student Loans and
Commercial Cleaning
BOOK NOW
Balakumaran
(416) 455 - 6168
balatharshi14@hotmail.com